# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 62 — 1973 ජූනි 01 වැනි සිකුරාදා — 1973.06.01**

**62 ஆம் இலக்கம்—1973 ம் ஆண்டு யூன் மாதம் 01 ந் திகதி வெள்ளிக்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (I)— பொது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப்பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனம் ... ... ... | — |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் ... ... | — |
| அமைச்சரவை நியமனங்களும் பிறவும் ... ... | — |
| அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் ... | — |
| நீதிச் சேவைகள் ஆலோசனைச் சபையின் நியமனங்களும் பிறவும்... | — |
| மற்றைய நியமனங்களும் பிறவும் ... ... | 379 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் ... ... | 380 |
| அரசாங்க அறிவித்தல்கள் ... ... ... | 380 |

| | பக்கம் |
|---|---|
| விலைக்கட்டளைகள் ... ... ... | — |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் ... ... | — |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் ... ... | — |
| வரவு செலவுத் திரட்டுக்கள் ... ... ... | — |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் ... | 395 |
| மானுமிகளுக்கு அறிவித்தல்கள் ... ... | — |
| " மதுவரிச் சட்ட " அறிவித்தல்கள் ... ... | — |


**கவனிக்க.**—இலங்கைப் பழச்சபை சட்டமூலம் 1973 ஆம்ஆண்டு மே மாதம் 18 ந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

## மற்றைய நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 284

இலங்கை நிருவாக சேவையில் பின்வரும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன.

இ. நி. சே. வகுப்பு I தரம் 1 ஐச் சேர்ந்த கலாநிதி வி. இராமநாதன் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.09.11 தொடக்கம் பொது திறைசேரிக்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு I தரம் II ஐச் சேர்ந்த திரு. பி. எம். விஜேசூன் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.01.03 தொடக்கம்மறுசீரமைப்புத் திணைக்கள ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. எம். ஈ. எல். பெர்னாந்து மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை 1972.11.15 தொடக்கம் கடற்றொழில் அமைச்சிற்கு இணைக்கப்பட்டவராக.

இ. நி. சே. வகுப்பு II ஐச் சேர்ந்த திரு. எஸ். தர்மலிங்கம் 1972.12.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கப்படும் வரை சிரேட்ட உதவித் தொழில் ஆணையாளர்களுள் ஒருவராக.

பொது எழுதுநர் சேவையின் நிறைவேற்று வகுப்பின் சிறப்புத்தர எழுதுநரான திரு. ரி. ஜீ. எப். மென்டிஸ், மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1971.07.27 தொடக்கம் கொழும்பு நிருவாக மாவட்டத்தின் மேல் அதிகாரமுடைய அரசாங்க அதிபருக்கு பதில் அலுவலக உதவியாளராகக் கடமைபுரிய.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எஸ். டபிள்யு. ஏ. டி சில்வா மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.09.11 தொடக்கம் பொதுதிறைசேரி வழங்கல் பதவியணிப் பகுதியின் உதவிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. என். ரீ. பீ. பெர்னாந்து மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.10.02 தொடக்கம் கமநலச் சேவைகள் உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. பி. ஈ. பெர்னாந்து மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.10.02 தொடக்கம் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. கெ. சண்முகநாதன் மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.10.03 தொடக்கம் கமநலச் சேவைகள் உதவி ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. பி. கே. ஏ. ஏ. பீ. அல்விஸ் மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.10.28 தொடக்கம் மொனராகலை நிருவாக மாவட்டத்து மாவட்ட இறைவரி உத்தியோகத்தராக (தலைமைக் காரியாலயம்).

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. வி. சி. வர்ணகுலசூரிய மறுகட்டளை பிறப்பிக்குவரை 1972.10.31 தொடக்கம் மொனராகலை நிருவாக மாவட்டத்தின் பிந்தெனே பத்துவின் மாவட்ட இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஏ. எம். எம். ஷவுக்கத் மறுகட்டளை பிறப்பிக்குவரை 1972.11.01 தொடக்கம் பதுளை நிருவாக மாவட்டத்து மாவட்ட இறைவரி உத்தியோகத்தராக (பொது உறவு).

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த செல்வி பி. கே. எல்லாளகொட மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.11.01 தொடக்கம் உதவியுணவுக் கட்டுப்பாட்டதிகாரியாகவும் உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரியாகவும் (உணவு).

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு மே மீ 05 ந் உ.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. ஈ. ஆர். ஒ. டீ. சில்வா மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.11.01 தொடக்கம் இலங்கை முழுவதற்கும் உதவியுணவுக் கட்டுப்பாட்டதிகாரியாகவும், உதவி விலைக் கட்டுப்பாட்டதிகாரியாகவும்.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. அ. கப்பு ஆராய்ச்சி மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.11.15 தொடக்கம் நுவரேலியா நிருவாக மாவட்டத்து நுவரேலியாப் பிரிவிற்கு மாவட்ட இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. எ. டி. எ. பொகலமுல்ல மறுகட்டளை பிறப்பிக்கும்வரை 1972.11.21 தொடக்கம் மாத்தளை நிருவாக மாவட்டத்தின் மாத்தளைப் பிரிவிற்கு மாவட்ட இறைவரி உத்தியோகத்தராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. பி. பீ. வீரகொட மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.12.01 தொடக்கம் கலாச்சார அலுவல்கள் உதவிப் பணிப்பாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. டபிள்யு. எல். சி. பெரேரா 1972.12.01 தொடக்கம் மறுகட்டளை பிறப்பிக்கப்படும்வரை சிரேட்டஉதவித தொழில் ஆணையாளராக.

இ. நி. சே. வகுப்பு III ஐச் சேர்ந்த திரு. கெ. எ. ஐ. டீ. ஆபுறு மறுகட்டளை பிறப்பிக்கும் வரை 1972.12.01 தொடக்கம் கலாச்சரா அலுவல்கள் அமைச்ச உதவிச் செயலாளராக.

பீ. எச். சிறிவர்த்தன,
பதில் செயலாளர்,
அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உண்ணுட்டலுவல்கள் அமைச்சு.

அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி,
உண்ணுட்டலுவல்கள் அமைச்சு,
சொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1973.05.18

6–112—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

# பதிவாளர் நியமனங்களும் பிறவும்

1973 இன் இல. 285

**பதில் நியமனம்**

உயர்நீதிமன்றத்தின் 4 வது பிரதிப் பதிவாளரான திரு. எல். எ. செனிவரத்தின அவர்கள் 1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ந் தேதியிலிருந்து மறு அறிவித்தல்வரை உயர்நீதிமன்றத்தின் 3 வது பிரதிப் பதிவாளர் பதவியில் முழு நேரமும் பதிற் கடமை புரியும் பொருட்டு நீதி அமைச்சரினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிஹால் ஜயவிக்கிரம,
நீதிச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு மே மீ 23 ந் உ.

6–132—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

1973 இன் இல. 286

**பதில் நியமனம்**

உயர்நீதிமன்ற சுருக்கெழுத்தாளர் சேவையின் உயர்தர சுருக்கெழுத்தாளரான திரு. அந்தோனி பெரேரா அவர்கள் 1973 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 ந் தேதியிலிருந்து உயர் நீதிமன்றத்தின் 4 வது பிரதி பதிவாளர் பதவியில் பதிற் கடமை புரியும் பொருட்டு நீதி அமைச்சரினுல் நியமிக்கப்பட்டுள்ளார்.

நிஹால் ஜயவிக்கிரம,
நீதிச் செயலாளர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12,
1973 ம் ஆண்டு மே மீ 23 ந் உ.

6–131—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

# அரசாங்க அறிவித்தல்கள்

**மோட்டார் கார் (மரபொழுங்கு) கட்டளைச் சட்டம்**

(204 ஆம் அத்தியாயமான) மோட்டார் கார் (மரபொழுங்கு) கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவினுல் அவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு போக்குவரத்து அமைச்சரினுல் செய்யப்பட்டதும் தேசிய அரசுப் பேரவையினுல் அங்கீகரிக்கப்பட்டுள்ளதுமான ஒழுங்குவிதி.

லெஸ்லி குணவர்தன,
போக்குவரத்து அமைச்சர்.

கொழும்பு, 1973 ம் ஆண்டு மே மீ 14 ந் உ.

ஒழுங்குவிதி

1958 நவம்பர் 28 ஆந் தேதிய 11,603 ஆம் இலக்க கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட 1958 ஆம் ஆண்டின் சர்வதேசச் சுற்றோட்ட மோட்டார் வாகன ஒழுங்குவிதிகள் அதன் 16 ஆம் ஒழுங்குவிதியிலுள்ள " ரூபா 5 " எனும் சொற்றொடருக்குப் பதிலாக " ரூபா 10 " எனும் சொற்றொடரைப் பதிலிடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகிறது.

6–116—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

எல். டி.—பி. 8/72

**1971 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க அரசாங்க அலுவலர்கள் நலவுதவிச் சங்க (கூட்டிணைத்தல்) சட்டம்**

1971 ஆம் ஆண்டின் 27 ஆம் இலக்க அரசாங்க அலுவலர்கள் நலவுதவிச் சங்க (கூட்டிணைத்தல்) சட்டத்தின் 10 ஆம் பிரிவின் கீழ் அரசாங்க அலுவலர்கள் நலவுதவிச் சங்கத்தால் ஆக்கப்பட்டதும் அப்பிரிவினுல் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு நிதி அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்டவையுமான விதிகள்.

சீ. எ. குறே,
செயலாளர்,
நிதி அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 19 ந் உ.

விதிகள்

**அத்தியாயம் 1—பொது**

1. (1) 35 வயதிற்கு மேற்படாதவர்களும் அத்துடன் ஒன்றில் ஓய்வூதியத்திற்குரிய நியமனங்களில் உறுதிப்படுத்தப்பட்ட வர்களுமான அல்லது நிரந்தர நியமனங்கள் வகிப்பவராய், அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்கு உதவுதொகைகள் செலுத்து பவர்களுமான அரச அலுவலர்களும் உள்ளூர் ஆட்சிச் சேவை அலுவலர்களும், முகாமைக் குழுவின் தற்றுணிபின் பேரில், சங்கத்தின் உறுப்பினர்களாக அனுமதிக்கப்படுவதற்குத் தகைமையுடையராதல் வேண்டும் ;
ஆயின்,

(அ) 1.4.1946 ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்னர் அவரது ஓய்வூதியத்திற்குரிய நியமனத்தை வகிப்பதை விட்டொழித்துள்ளவரும் அல்லது விட்டொழிப்பவரும் அத்துடன் அத்தகைய விட்டொழித்தற்றேதி யிலிருந்து இரண்டு ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் ஓய்வூதிய அடிப்படையில் அரசசேவையில், அல்லது உள்ளூராட்சிச் சேவையில் நிரந்தர நியமனம் (ஏற்றுக் கொண்டுள்ள அல்லது) ஏற்றுக்கொள்ளும் எவரேனும் உறுப்பினர், சங்கத்திற்கும் கொடுக்குமதியான எல்லா நிலுவைகளையும் செலுத்தியதன் மீது, முகாமைக் குழுவின் தற்றுணிபின் பேரில், உறுப்பாண்மையை மீளப் பெறுவதற்குத் தகைமையுடையவராதல் வேண்டும் ;

(ஆ) அரச சேவை அல்லது உள்ளூராட்சிச் சேவையிலிருந்து அச்சேவைக்கு வெளியே ஒரு பதவிக்கு மாற்றப்பட்ட அல்லது மாற்றுச்சேவைக்கு நியமிக்கப்பட்ட எவரேனும் உறுப்பினர், உறுப்பாண்மையைத் தொடர்ந்து வகிக்கத் தகைமையுடையவராதல் வேண்டும் ;

(இ) வேறு நியமனங்களை ஏற்பதற்காக, ஓய்வூதியத்திற்கான அல்லது ஓர் அளிப்பிற்கான உரிமையுடன் விடுவிக்கப்பட்ட உறுப்பினர் எவரும் உறுப்பாண்மையைத் தொடர்ந்து வகிக்கத் தகைமையுடையராதல் வேண்டும். ஓய்வூதியங்கள் பற்றிய குறிப்புக்களின் கீழான ஓர் அளிப்புக் கொடுப்பனவின் மீது அல்லது வேலைநீக்கத்தின் மீது அல்லது தவணை தவறுதலின் மீது மாத்திரமே, அத்தகைய உறுப்பாண்மை இல்லாதொழியும் ;

(ஈ) (1) தீவிற்கு வெளியே சென்றமை ; (2) சேவையிலிருந்து நீக்கஞ் செய்யப்பட்டமை ஆகியவற்றின் விளைவாக, அல்லது (3) வைத்திய விடுமுறை அல்லது படிப்பு விடுமுறை காலத்தில் அல்லது கடமையிலிருந்து இடை நிறுத்தஞ் செய்யப்பட்டுள்ள காலத்தில் குறைக்கப்பட்ட சம்பளத்தைப் பெறுவதன் விளைவாக உறுப்பாண்மை இல்லாதொழிக்கப்பட்டுள்ள அல்லது இல்லாதொழியும் எவரேனும் உறுப்பினருக்கு முகாமைக்குழுவின் தற்றுணிபின் பேரில் அவரது உறுப்பாண்மை மீளளிக்கப்படலாம் ; ஆயின், அத்தகைய உறுப்பினர்—

(1) உறுப்பாண்மை இல்லாதொழிக்கப்பட்ட திகதியிலிருந்து ஐந்துவருடம் முடிவடைவதற்கு முன்பும், தீவிற்கு திரும்பிய அல்லது வைத்திய விடுமுறை, படிப்பு விடுமுறை முடிவுற்ற அல்லது சேவையில் மீளவமர்த்தப்பட்ட தேதியிலிருந்து மூன்றுமாத காலத்திற்குள்ளும் உறுப்பாண்மையை மீளப் பெறு வதற்கு உறுப்பினர் விண்ணப்பித்தல் வேண்டுமென்பதுடன்,

(2) அவர் உறுப்பினராக இடையீடின்றித் தொடர்ந்திருந்தால் அவரிடமிருந்து வருமதியாயிருந்திருக்கக்கூடிய அத்தகைய எல்லாப் பணத்தொகைகளையும், முகாமைக்குழுவால் குறித்துரைக்கப்பட்ட ஒரு தேதியிலோ அல்லது அதற்கு முன்னரோ அவர் சங்கத்திற்குச் செலுத்தல் வேண்டும்.

(2) நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரியதுமான பதவிகளில் உறுதிப்படுத்தப்படாதவராய் ஆனால், தகுதிகாண்நிலையில் அத்தகைய பதவிகளை வகிக்கும் அலுவலர்கள், முகாமைக்குழுவின் தற்றுணிபின் பேரில் உறுப்பினர்களாக அனுமதிக்கப் படலாம்.

உறுப்பினர்களைச் சேர்த்தல்.

2. (1) உறுப்பாண்மைக்கான விண்ணப்பம், முகாமைக்குழுவினால் காலத்திற்குக்காலம் அங்கீகரிக்கப்படக்கூடிய அத்தகைய படிவத்தில் செய்யப்படுதல் வேண்டும். அவ்வித விண்ணப்பத்தின் மீது முகாமைக்குழுவின் முடிவு இறுதியானதாகும். அத்தகைய விண்ணப்பம் நிராகரிக்கப்படுமிடத்து காரணம் எதுவும் காட்டப்படத் தேவையில்லை.

(2) விண்ணப்பகாரரைப் பற்றிய வைத்திய அறிக்கை அலுவலகத்தில் கிடைக்கும் மாதத்தின் முதல் திகதிக்கு முன்னர் உறுப்பாண்மை தொடங்காது. விண்ணப்பம் முறையாக அங்கீகரிக்கப்பட்ட பின்னர் மாத்திரமே, உறுப்பாண்மைக்கு அனுமதி யளிக்கப்படும்.

(3) தனது விண்ணப்பத்தில் பொய்க்கூற்று அளித்த எவ்வுறுப்பினரும் அத்தகைய கூற்று வேண்டுமென்று தம்மால் அளிக்கப்படவில்லையென அவர் முகாமைக்குழுவைத் திருத்திப்படுத்தினாலன்றி, அவரால் சங்கத்துக்குச் செலுத்திய எல்லாப் பணத்தையும் உறுப்பினருக்கான சிறப்புரிமைகளையும் இழப்பார்.

(4) உறுப்பாண்மைக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரும், தன்னுடைய செலவிலேயே ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரால் அல்லது இளைப்பாறிய அரசாங்க வைத்திய உத்தியோகத்தரால் வைத்திய பரிசோதனைக்கு உள்ளாதல் வேண்டும். அவ்வைத்திய உத்தியோகத்தரின் அறிக்கை அங்கீகரிக்கப்பட்ட படிவத்தில் அமைதல் வேண்டும்.

(5) சேவையில் நியமனம் பெற்ற மூன்று வருடகாலத்துக்குள் வைத்திய அறிக்கை அவசியமின்று. ஆனால், விண்ணப்பதாரர் ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரால் பரிசோதிக்கப்பட்டுத் தகுதி காணப்பட்டவர் என்னும் பொருள்படத் திணைக்களத் தலைவரிடமிருந்து பெறப்பட்ட ஓர் அத்தாட்சிப் பத்திரம் விண்ணப்பத்துடன் இணைத்தனுப்பப்படல் வேண்டும்.

கட்டணங்கள்.

3. (அ) உறுப்பாண்மைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பகாரர் ஒவ்வொருவரும் ஐந்து ரூபா பிரவேசக் கட்டணம் செலுத்துதல் வேண்டும் ; இப்பணம் உறுப்பினராக்கப்பட்ட முதல் மாதத்தில் அவரது சம்பளப் பட்டியல் மூலம் அறவாக்கப்படும் ;

1953 ஆம் ஆண்டுக்கு முன்னுள தொழில் நட்ட நீக்கக் கட்டணங்கள்.

(ஆ) வருடமொன்றுக்கு நாலு ரூபா வீதம் மீளப் பெறுவதற்குரியதல்லாத 1953 ஆம் ஆண்டுக்கு முன்னுள தொழில் நட்ட நீக்கக் கட்டணம், எல்லா உறுப்பினர்கள் மீதும் விதிக்கப்பட்டு வருடாந்தம் மார்ச்சு மாதத்திலும் திசெம்பர் மாதத்திலும் இரு தவணைகளில் இரண்டு ரூபா வீதம் அறவிடப்படும்.

முகாமைக் குழு.

4. (1) எல்லோரும் கொழும்பில் தொழிலாற்றுகின்றவர்களானவர்களும் ஒவ்வோர் ஆண்டும் ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் தெரிவு செய்யப்படுபவர்களுமான ஒரு தலைவர், இரு உபதலைவர்கள் மற்றும் பன்னிரண்டு அங்கத்தவர்களையும் நிதி என்னும் விடயத்துக்குப் பொறுப்பாயுள்ள அமைச்சுச் செயலாளரால் நியமிக்கப்பட்ட ஓர் அரச அலுவலர் ஆகியோரைக் கொண்ட முகாமைக்குழுவொன்றினால் சங்கத்தின் அலுவல்கள் நிருவகிக்கப்படும்.

(2) மேலேயுள்ள (1) ஆம் உபவிதியில் குறிப்பிடப்பட்ட பதவிகளுக்கும் முகாமைக்குழு உறுப்பாண்மைக்குமான தேர்தல் நியமனப் பத்திரங்கள், முன்மொழிபவர், வழிமொழிபவர் ஆகியோரால் முறையாகக் கைச்சாத்திடப்பட்டு, வேட்பாளரது சம்மதத்தைத் தெரிவிப்பதோடு அவர்களது உறுப்பாண்மை இலக்கத்தைக்காட்டும் அவரது மாட்டறைதலுடன், ஆண்டுப் பொதுக்கூட்டத்திற்கான தொடக்க அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட திகதியில் அல்லது அதற்கு முன்னர் செயலாளரும் கணக்காளருமானவருக்குக் கிடைக்கும் வண்ணம் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். முகாமைக்குழு எல்லா நியமனப் பத்திரங்

களையும் நுணித்தாய்ந்து, முறையாகச் செய்யப்பட்ட நியமனங்களின் வேட்பாளர்கள், அவர்களது முன் மொழிபவர், வழிமொழிபவர் ஆகியோரது பெயர்களின் முழு நிரல் ஒன்றை நிகழ்ச்சி நிரலுடன் பிரசுரித்தல் வேண்டும். இரகசிய வாக்குச்சீட்டுமூலம் தெரிவு நடைபெறும்.

**மதிப்பூதியம்.**

5. (1) தலைவருக்குக் கொடுக்கப்படும் மதிப்பூதியம் வருடத்திற்கு ஓராயிரத்து இருநூறு ரூபாவாகும்.

(2) தலைவர், இரு உபதலைவர்கள், செயலாளரும் கணக்காளருமானவர் ஆகியோரே சங்கத்தின் நம்பிக்கைப் பொறுப்பாளர்களாவர்.

**முகாமைக் குழுவின் தத்துவங்கள்**

6. (1) அலுவலர்கள், முகவர்கள், சேவகர்கள் ஆகியோர்களின் நியமனத்துடனும் வேலை நீக்கத்துடனும், சங்க அலுவல்களின் நிருவாகத்துடனும், அதன் நோக்கங்களை அடைதலுடனும் தொடர்புடைய எத்தகையவாயினுமான எல்லாக் கருமங்களையும் பொதுவாகச் செயலாட்சி செய்வதற்கும், பணிப்பதற்கும், தீர்மானிப்பதற்கும் அத்தகைய நியமனத்தினதும் நிருவாகத்தினதும் நோக்கங்களுக்காகத் தேவையான செலவுகளை சங்கத்தின் நிதியத்திலிருந்து கொடுத்துத்தீர்த்தற்கு முழுத் தத்துவமும் அதிகாரமும் முகாமைக்குழுவுக்கு இருத்தல் வேண்டும்.

(2) எழுதுவினைஞர் பணியாட்டொகுதியைச் சேர்ந்தோர் இரண்டாயிரம் ரூபாவிற்குக் குறையாமலும், சிற்றூழியர் பணியாட்டொகுதியைச் சேர்ந்தோர் ஐந்நூறு ரூபாவிற்குக் குறையாமலும் நிரந்தரப் பணியாட்டொகுதியில் சேர்க்கப்படும் அனைவரும் பிணைப்பணம் செலுத்துமாறு முகாமைக் குழுவினால் காலத்திற்குக் காலம் தீர்மானிக்கப்படும் அத்தகைய முறைக்கேற்ப தேவைப்படுத்தப்படுவர்.

(3) சங்கத்தின் நோக்கங்களை அடைவதற்கான கொடுப்பனவுகளைச் செலுத்துவதற்குத் தேவையாகக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைவரை முதலீடுகளிலிருந்து கடன் பெறுவதற்கு முகாமைக்குழுவிற்குத் தத்துவமுண்டு.

**குழுக்கூட்டங்கள்.**

7. (1) சங்கக்கருமங்களை நடாத்துவதற்காக முகாமைக் குழுவின் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் ஆகக்குறைந்தது ஒருமுறையாவது நடத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் தலைவர், அவரது தற்றுணிபிற்கேற்ப அல்லது குழு உறுப்பினர்களின் எண்மருக்குக் குறையாதோரின் எழுத்திலான வேண்டுதலுக்கமைய, விடயத்துக்கேற்றவாறு அத்தகைய வேண்டுதலில் அல்லது அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட அத்தகைய கருமங்களை நடாத்துவதற்காக எந்நேரத்திலாவது குழுவின் ஒரு விசேட கூட்டமொன்றைக் கூட்டுதல் வேண்டும்.

**நடப்பெண்.**

(2) முகாமைக்குழுவின் கூட்டத்திற்கான கூட்ட நடப்பெண் ஐந்து உறுப்பினர்களாகும்.

**முகாமைக் குழுக் கூட்டங்களுக்குச் சமுகமளித்தல்.**

8. (1) தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு சமுகமளிக்க முடியாதிருப்பதற்கான காரணத்தை எழுத்துமூலம் முன் கூட்டியே அறிவிக்காது சமுகமளிக்காத குழு உறுப்பினர் எவரேனும் அவ்வுண்மைக்காரணமாக முகாமைக்குழுவின் உறுப்பினர் பதவியிலிருந்து நீங்கியவராவர்.

**முகாமைக் குழுவில் ஏற்படும் வெற்றிடங்கள்.**

(2) முகாமைக்குழுவில் வெற்றிடமேற்படும் பட்சத்தில் அது, பொது உறுப்பினர்களின் நிரலிலிருந்து, 4 (2) ஆம் விதிக்கு இணங்க ஒரு தேர்தல் நடாத்தி அத்தகைய வெற்றிடம் நிரப்பப்படும்.

**நிதி வருடம்.**

9. சங்கத்தின் நிதி வருடமானது ஒவ்வோர் ஆண்டும் சனவரி முதலாம் நாளன்று தொடங்கும் பன்னிரண்டு மாத காலமாகும்.

**கணக்காய்வாளர்கள்.**

10. ஆண்டுப் பொதுக் கூட்டத்தில் கணக்காய்வாளர்கள் தெரிவு செய்யப்பட்டு அவர்களுக்கான ஊதியம் நிர்ணயிக்கப்படும். கணக்குப் பரிசோதனைக்கான நிகழ்ச்சித்திட்டத்தை, ஒவ்வோராண்டும் கணக்காய்வாளர்கள், முகாமைக்குழுவின் அங்கீகாரத்தோடு, தீர்மானிப்பார்கள்.

**ஆண்டுப் பொதுக் கூட்டம்.**

11. (1) ஒவ்வொரு வருடமும் யூன் முப்பதாம் தேதிக்குப் பிந்தாமல் கூட்ட அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய நேரத்திலும் இடத்திலும் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் நடைபெறும்.

(2) முற்போந்த நிதிவருடத்தில் சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றிய அறிக்கை, செயலாளரும் கணக்காளருமானவரால் தயாரிக்கப்பட்டனவும், சங்கத்தின் கணக்காய்வாளர்களால் முறையாகக் கணக்காயப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவையுமான,

(அ) கிடைத்தல் கொடுப்பனவுக் கணக்குகள் ;
(ஆ) வரவு செலவுக் கணக்குகள் ;
(இ) ஓய்வூதிய நன்கொடை நிதிக் கணக்குகள் ;
(ஈ) மரண நன்கொடைக் கணக்குகள் ;
(உ) சேமிப்புத் திட்டக் கணக்குகள் ;
(ஊ) ஐந்தொகைக் கணக்குகள்

ஆகியவற்றுடன், அத்தகைய ஆண்டுப் பொதுக்கூட்டத்தில் முகாமைக்குழுவினால் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

**விசேட பொதுக் கூட்டம்.**

12. (1) சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம்—
(அ) குழுவின் வேண்டுகோளின்படி, அல்லது
(ஆ) சங்கத்தின் ஆகக்குறைந்தது ஐம்பது உறுப்பினர்களுக்குக் குறையாதவர்களின் எழுத்துமூலமான வேண்டுகோளின் பேரில், அல்லது
(இ) தலைவரால்

கூட்டப்படலாம் ;

(2) விசேட பொதுக்கூட்டத்தைக் கூட்டும் ஒவ்வொரு எழுத்து மூலமான வேண்டுகோள் அல்லது அறிவித்தல், அக் கூட்டத்தில் நடாத்தப்படவிருக்கும் கருமம் பற்றிக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பொதுக்கூட்ட அறிவித்தல்.**

13. (1) ஒவ்வொரு பொதுக்கூட்டத்திற்கும் பதினான்கு நாட்களுக்குக் குறையாத முன்னறிவித்தல், குறைந்தது ஒரு உள்ளூர்த் தினசரிச் செய்தித்தாளிலான விளம்பரத்தின் மூலம் அளிக்கப்படல் வேண்டும்.

(2) பொதுக்கூட்டத்தில் கொணரப்படவிருக்கின்ற, முறையாக முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்ட தீர்மானங்களும், விதிகளுக்கான திருத்தங்களும், கூட்டத்தைக் கூட்டுதல் பற்றிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்ட தேதியிலோ அல்லது அதற்கு முன்னரோ செயலாளரும் கணக்காளருமானவருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.

**பொதுக்கூட்டத்திற்கான நடப்பெண்.**

14. 11 ஆம், 12 ஆம் விதிகளின் கீழான பொதுக்கூட்டமாய் அமைவதற்குத் தேவையான உறுப்பினர்களின் கூட்ட நடப்பெண் முப்பதாகும்.

**கூட்டங்களில் வாக்கெடுப்பு.**

15. ஒரு பொதுக்கூட்டத்திலான வாக்கு எடுப்பு, அத்தகைய கூட்டத்தில் வேறுவகையாகத் தீர்மானிக்கப்பட்டாலன்றி, அக்கூட்டத்தில் கைகளை உயர்த்துதல் மூலம் எடுக்கப்படும். சமமான வாக்குக்கள் கிடைக்கும் பட்சத்தில் தலைவருக்கு அறுதியிடும் வாக்குரிமை உண்டு.

**கூட்டங்களின் தவிசாண்மை.**

16. சங்கக் கூட்டங்கள் எல்லாவற்றிற்கும், சங்கத் தலைவரே தவிசாளராயிருத்தல் வேண்டும். அவர் வருகை தராவிடில், வருகை தந்தவர்களால் முறையாகத் தெரிவு செய்யப்பட்ட உபதலைவர்களுளொருவர் அத்தகைய கூட்டத்தின் தவிசாளரா யிருத்தல் வேண்டும்.

**நிதிகளின் கட்டுக் காப்பு.**

17. (1) செயலாளரும் கணக்காளருமானவர், சங்கத்துக்குச் சேருகின்ற எல்லாப் பணத்தையும் ஏற்று அவைபற்றி கணக்கு வைத்திருத்தல் வேண்டுமென்பதுடன் அத்தகைய பணம், முகாமைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்டவாறுன உள்ளூர் வங்கிகளில் ஒன்றிலோ பலவற்றிலோ, சங்கத்தின் பெயரிலிடப்படும்; அத்துடன், செயலாளரும் கணக்காளருமானவரதும் செயலாளரும் கணக்காளருமானவருக்காகவும் அவர் சார்பாகவும் செயலாற்றுவதற்கு முகாமைக்குழுவால் முறையாக நியமிக்கப்பட்ட வேறெவரேனும் அலுவலரினதும், அத்துடன் தலைவரினதும் அல்லது இரு உபதலைவர்களில் ஒருவரினதும் கையொப்பத்துக்கு மதிப்பளித்தல் தகுதியுடையதாதல் வேண்டும்.

(2) முகாமைக்குழு அதன் தற்றுணிபிற்கமைய சங்கத்தின் மிகையான நிதிகளைத் தேசிய சேமிப்பு வங்கியில், வர்த்தக வங்கிகளின் நிலையான வைப்புகளில் அத்துடன்/அல்லது இவ்விதிகளில் விதித்துரைக்கப்பட்டவாருக உறுப்பினர்களுக்குக் கடன்களாக முதலீடு செய்யலாம்.

**வைத்திருக்கப்பட வேண்டிய புத்தகங்கள்.**

18. சங்கத்தின் வேலைகளைக் கொண்டு நடாத்துவதற்கு செயலாளரும் கணக்காளருமானவர், உறுப்பினர்கள் பதிவேடு, காசேடு, நாட்குறிப்பேடு, பேரேடு, நிகழ்ச்சிக்குறிப்பேடு ஆகியவற்றையும் இன்னும் தேவையானவையெனக் காணக்கூடிய வேறு புத்தகங்களையும் வைத்துப் பேணல் வேண்டும்.

**புத்தகங்களின் பரிசோதனை.**

19. எவ்வுறுப்பினரும், எழுத்துமூலம் செயலாளரும் கணக்காளருமானவருக்கு ஏழுநாள் முன்னறிவித்தல் கொடுப் பதன்மேல் அலுவலக நேரங்களின் போது சங்கத்தின் புத்தகங்களையும் கணக்குகளையும் பரிசோதிக்கலாம்.

**விதிகளில் மாற்றங் களும் முதலியன**

20. சங்கத்தின் எவ்விதி அல்லது விதிகள் பற்றிய மாற்றம், திருத்தம், நீக்கம் அல்லது சேர்த்தல், ஒரு பொதுக் கூட்டத்தில் வருகைதந்து வாக்களிக்கும் உறுப்பினர்களில் மூன்றிலிரண்டு பங்கு உறுப்பினர்களால் நிறைவேற்றப்பட்டாலன்றிச் செல்லுபடியாகாது.

**இளைப்பாற்று நன்கொடை ஒதுக்கம்.**

21. (1) செலவிலும் பார்க்கக் கூடுதலாயுள்ள வருமானம் வருடா வருடம் இளைப்பாற்று நன்கொடை ஒதுக்கத்திற்கு மாற்றப்படும்.

(2) வருமானச் செலவுக் கணக்குகளிலேற்படும் குறைவுகளுக்கும் உறுப்பாண்மை நிறுத்தம் காரணமாய் கொடுக்கு மதியாயுள்ள பணம் தொடர்பாக கடந்தவருடக் கணக்குக்களில் ஏற்பாடு செய்யப்படாத ஏதேனும் பொறுப்புக்களுக்கும் இவ்வொதுக்கம் பொறுப்பாக்கப்படும்.

**பொது ஒதுக்கம்.**

22. (1) 21 ஆவது விதியில் அடங்கியுள்ள எவையேனும் எவ்வாறிருப்பினும் இளைப்பாற்று நன்கொடை ஒதுக்கத்தி லிருந்து ஐயாயிரம் ரூபா மாற்றப்படுவதனுல் 1965 ஆம் ஆண்டுக் கணக்குகளில் பொது ஒதுக்கம் ஒன்று உண்டாக்கப்படும், அத்துடன் 1965 ஆம் ஆண்டு தொடங்கி வருடாவருடம் இளைப்பாற்று நன்கொடை ஒதுக்கத்திற்கு மாற்றப்படுவதன்முன் உள்ள மிகுதி வருமானத்திலிருந்து இரண்டாயிரம் ரூபா ஒதுக்கப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய பணத்தொகை இவ் வொதுக்கத்திற்கு வரவு வைக்கப்படும். இவ்வொதுக்கம், எல்லாச் செலவுகள், கடந்தவருடப் பொறுப்புக்கள், முகாமைக்குழு தகுந்ததெனக் கருதும் வேறேதேனும் பொறுப்புக்கள் ஆகியவற்றிற்கும் பொறுப்பாக்கப்படும்.

**கட்டிட ஒதுக்கம்.**

(2) 1972 ஆம் ஆண்டுக் கணக்குகளில் " கட்டிட ஒதுக்கம் " எனப்படும் ஒதுக்கமொன்று ஏற்படுத்தல் வேண்டும் என்பதுடன் இளைப்பாற்று நன்கொடை ஒதுக்கத்திற்கு மாற்றப்படுவதன் முன்னர், வருமானமிகுதியிலிருந்து வருடாந்தம் மூன்றிலொரு பங்கு தொகை இவ்வொதுக்கத்திற்கு ஒதுக்கி வரவு வைக்கப்படுவதன் மூலம் பெருக்கப்படல் வேண்டும்.

**ஒடுக்கப்படுவதற் கான ஏற்பாடு.**

23. இடாப்பிலுள்ள உறுப்பினர்களில் குறைந்தபட்சம் மூன்றிலிரண்டு பங்கினரின் சம்மதமின்றி, இச்சங்கம் ஒடுக்கப் படலாகாது. அவ்வாறு ஒடுக்கப்படும் பட்சத்தில், உரிமைக் கோரிக்கைகள் அனைத்தையும் கொடுத்த பின்னர், உதவுதொகை களாக அத்துடன்/அல்லது இறப்பு நன்கொடைகளாகத் தத்தம் உறுப்பாண்மை காலத்தின்போது ஒவ்வொரு உறுப்பினராலும் செலுத்தப்பட்ட பணத்தொகைகளின் விகிதாசாரப்படி அங்கத்தின் நிதிகள் உறுப்பினர்களிடையே பிரித்துக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

**ஏற்பாடுகள் செய்யப்படாத விடயங்கள்.**

24. சங்க விதிகளில் ஏற்பாடுசெய்யப்படாத எவ்விடயமும் முகாமைக்குழுவினுல் ஒரு தீர்மானமூலம் எடுத்துக்கொள்ளப் படலாம் என்பதுடன் உறுதிப்படுத்தப்படுவதற்காக அது பொதுக்கூட்டமொன்றுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

**பொருள் கோடல்.**

25. இவ்விதிகளில், சந்தர்ப்பம் வேறு விதமாகத் தேவைப்படுத்தினுலொழிய " சங்கம் " என்பது " அரசாங்க அலுவலர்கள் நலவுதவிச்சங்கம் " என்பதையே கருதும்.

" சேவை என்பது " அரசாங்க சேவை " அல்லது " உள்ளூராட்சிச் சேவை " யையே கருதும்.

## அத்தியாயம் 2—உதவு தொகைகளும் நன்கொடைகளும்

**உதவுதொகை.**

26. (1) ஒவ்வொரு உறுப்பினரும் மாதாந்தம் எட்டு ரூபா செலுத்துதல் வேண்டும்; இதில் ஒரு ரூபா மரணக் கொடுப்பனவாகவும் ஏழு ரூபா இளைப்பாற்று நலவுதவிக்கான உதவுதொகையாகவும் அமையும். முழுத்தொகையும் ஒவ்வொரு மாத இறுதியிலும் கொடுபட வேண்டும் என்பதுடன் வேதனத் தொகுப்பிலிருந்தும் இத்தொகை கழிக்கப்படும். ஒவ்வொரு மாதமும் இப்பணத்தொகை செயலாளரும் கணக்காளருமானவருக்கு அனுப்பப்படுவதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஒவ்வொரு உறுப்பினரும் எடுத்தல் வேண்டும்.

(2) 1.4.1963 இலும் அதற்குப் பின்னரும் உறுப்பினராக இருப்போர் யாவரைப் பொறுத்தவனாயினும் மேற்கூறப்பட்ட வட்டணவீதங்கள் கடந்த காலத்தை உள்ளடக்குவதாய் 1.1.1953 இலிருந்து ஏற்புடையதாகும்.

**பற்றுவரவுப் புத்தகம்.**

27. ஒவ்வொரு உறுப்பினருக்கும் பற்றுவரவுப் புத்தகமொன்று வழங்கப்படும். அது ஆறு மாதங்களுக்கொருமுறை செயலாளரும் கணக்காளருமானவருக்கு அனுப்பப்படின் பேரேட்டில் உள்ளவாறுன அவ்வுறுப்பினரது கணக்கு அதில் பதியப்படும்.

*கோரிக்கைகளைக் கொடுத்துத் தீர்த்தல்.*

28. (1) உறுப்பினர் ஒருவரின் உறுப்பாண்மை முடிவுறும் பட்சத்தில் அல்லது சேவையிலிருந்து இளைப்பாறும், நீக்கப்படும், நிறுத்தப்படும் அல்லது விலகும்பட்சத்தில், அவரது கணக்கில் வரவிலிருக்கும் பணத்தொகையிலிருந்து சங்கத்துக்கு அவர் கடன்பட்டிருக்கக்கூடிய ஏதேனும் பணத்தொகையைக் கழித்துக்கொண்டு, மிகுதியை, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு, அவர் அவ்வாறு உறுப்பாண்மையிலிருந்து முடிவுறுத்தப்பட்ட தேதியிலிருந்து அல்லது அவர் அவ்வாறு இளைப்பாறிய, நீக்கப்பட்ட, நிறுத்தப்பட்ட அல்லது விலகிய தேதியிலிருந்து மூன்று மாதத்திற்குள் அவருக்குக் கொடுக்கப்படல் வேண்டும்.

(2) அத்தகைய உறுப்பினர் இறக்கும் பட்சத்தில் அவருக்குக் கொடுக்குமதியான பணத்தொகை, அவரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவருக்கு அல்லது அத்தகைய பெயர் குறித்து நியமிக்கப்பட்டவர்கள் இல்லாவிடின் அவரது நிருவாகத்திற்குரிய மரணச் சொத்து ஏதேனுமிருப்பின் அதற்கு, அல்லது அவரது சட்டப்படியான பின்னுரிமையாளர்களுக்குச் செலுத்தப்படல் வேண்டும்.

(3) உறுப்பினர் ஒருவர் சேவையிலிருந்து, சந்தர்ப்பத்திற்கேற்றவாறு இளைப்பாறியுள்ளாரென, விலகியுள்ளாரென அல்லது நீக்கப்பட்டுள்ளாரென அல்லது நிறுத்தப்பட்டுள்ளாரெனக் கருதப்பட்ட தேதியிலிருந்து அல்லது அறுபதாம் வயதைப் பூர்த்தி செய்ததிலிருந்து உறுப்பாண்மை முடிவுறுதல் வலுவுக்கு வருதல் வேண்டும்.

29. உறுப்பாண்மை முடிவுறுத்தப்பட்டதன் மேல் உறுப்பினர்களுக்குக் கொடுபடவேண்டிய பணத்தொகைகள், உறுப்பாண்மை முடிவுறுத்தப்பட்ட முழு ஆண்டிலிருந்து மூன்று வருட காலத்திற்குக் கணக்கில் நிகழ் பொறுப்பாகக் காட்டப்படும் ; அதன் பின்னர், அவ்விதத் தொகைகள் பொது ஒதுக்கத்திற்கு மாற்றப்பட்டு அதிலிருந்து கொடுக்கப்படும் அத்தகைய பணத்தொகைகளின் விவரங்கள் வருடாந்தக் கணக்குகளில் வெளியிடப்படும்.

*இளைப்பாறும் போது கொடுக்கப்படும் நன்கொடை.*

30. இளைப்பாற்று நலவுதவிக்காகப் பணம் செலுத்திய ஒவ்வொரு உறுப்பினருக்கும், அவர் சேவையிலிருந்து இளைப்பாறிய அல்லது நிறுத்தப்பட்ட அல்லது வேலைநீக்கஞ் செய்யப்பட்ட அல்லது விலகிய பின் கூடிய விரைவில்,

(அ) இளைப்பாற்று நலவுதவி கணக்கில் அவரால் செலுத்தப்பட்ட உதவுதொகைகளின் மொத்தத் தொகையும்,

(ஆ) உறுப்பாண்மையில் நிறைவுபெற்ற ஒவ்வொரு வருடத்துக்கு, இளைப்பாற்று நலவுதவிக் கணக்கில் உறுப்பினர் செலுத்தியிருக்கும் முழுத்தொகையில் அறுபதிலொரு (1/60) பங்கு நன்கொடையும், உறுப்பினராயிருந்த மிகுதியான மாதங்களுக்கு உறுப்பாண்மையிலிருந்த கடைசி மாதம்வரை கணக்கிடப்பட்ட அதே விகிதசமமான நன்கொடையும்

வழங்கப்படல் வேண்டும்.

இந்த நோக்கத்திற்காக 1.1.1953 க்கு முன் எவ்வுறுப்பினராலும் செலுத்தப்பட்ட தொகை, 1.1.1953 வரையிலான உறுப்பாண்மை மாதம் ஒவ்வொன்றிற்கும் ரூபா ஒன்று வீதம் மரணக் கொடுப்பனவாகக் கழித்தபின்னரே கணித்தறியப்பட்டு அத்தகைய எஞ்சிய தொகையே இளைப்பாற்று நலவுதவிக்காகச் செலுத்தப்பட்ட உதவுதொகையாகக் கருதப்படல் வேண்டும்.

*சேவைக்காலத்தில் மரணம்.*

31. உறுப்பினரொருவர் இறக்கும்பட்சத்தில் அவரது நியமத்தருக்கு/நியமத்தர்களுக்கு, அல்லது நியமத்தரில்லாத விடத்து உறுப்பினரின் சட்டப்படியான பின்னுரிமையாளர்களுக்கு, அவ்வுறுப்பினர் சங்கத்தில் சேர்ந்த வயதுப்பிரகாரம் பின்வரும் அடிப்படையில் நன்கொடை செலுத்தப்படும் :—

| சேர்ந்த வயது | | | செலுத்தப்பட வேண்டிய தொகை ரூ. | ச. |
|---|---|---|---|---|
| 20 வயதும் அதற்குக் கீழும் | .. | .. | 4,500 | 0 |
| 20 வயதுக்கு மேல் 21 வயதுவரை | .. | .. | 4,400 | 0 |
| 21 வயதுக்கு மேல் 22 வயதுவரை | .. | .. | 4,300 | 0 |
| 22 வயதுக்கு மேல் 23 வயதுவரை | .. | .. | 4,200 | 0 |
| 23 வயதுக்கு மேல் 24 வயதுவரை | .. | .. | 4,100 | 0 |
| 24 வயதுக்கு மேல் 25 வயதுவரை | .. | .. | 4,000 | 0 |
| 25 வயதுக்கு மேல் 26 வயதுவரை | .. | .. | 3,900 | 0 |
| 26 வயதுக்கு மேல் 27 வயதுவரை | .. | .. | 3,800 | 0 |
| 27 வயதுக்கு மேல் 28 வயதுவரை | .. | .. | 3,700 | 0 |
| 28 வயதுக்கு மேல் 29 வயதுவரை | .. | .. | 3,600 | 0 |
| 29 வயதுக்கு மேல் 30 வயதுவரை | .. | .. | 3,500 | 0 |
| 30 வயதுக்கு மேல் 31 வயதுவரை | .. | .. | 3,400 | 0 |
| 31 வயதுக்கு மேல் 32 வயதுவரை | .. | .. | 3,300 | 0 |
| 32 வயதுக்கு மேல் 33 வயதுவரை | .. | .. | 3,200 | 0 |
| 33 வயதுக்கு மேல் 34 வயதுவரை | .. | .. | 3,100 | 0 |
| 34 வயதுக்கு மேல் 35 வயதுவரை | .. | .. | 3,000 | 0 |
| 35 வயதுக்கு மேல் 36 வயதுவரை | .. | .. | 2,900 | 0 |
| 36 வயதுக்கு மேல் 37 வயதுவரை | .. | .. | 2,800 | 0 |
| 37 வயதுக்கு மேல் 38 வயதுவரை | .. | .. | 2,700 | 0 |
| 38 வயதுக்கு மேல் 39 வயதுவரை | .. | .. | 2,600 | 0 |
| 39 வயதுக்கு மேல் 40 வயதுவரை | .. | .. | 2,500 | 0 |
| 40 வயதுக்கு மேல் 41 வயதுவரை | .. | .. | 2,400 | 0 |
| 41 வயதுக்கு மேல் 42 வயதுவரை | .. | .. | 2,300 | 0 |
| 42 வயதுக்கு மேல் 43 வயதுவரை | .. | .. | 2,200 | 0 |
| 43 வயதுக்கு மேல் 44 வயதுவரை | .. | .. | 2,100 | 0 |
| 44 வயதுக்கு மேல் 45 வயதுவரை | .. | .. | 2,000 | 0 |

*சங்கத்திலிருந்து விலகிக்கொள்ளுவதன் மீதும் இறப்பதன் மீதும் உதவுதொகைகள் மீளளிக்கப்படுதல்.*

32. (1) இளைப்பாற்று நலவுதவிக்காக உறுப்பினரொருவரால் செலுத்தப்பட்ட உதவுதொகைகளின் அவர் தொகை, உறுப்பாண்மையிலிருந்து விலகிக்கொள்ளும் பட்சத்தில் அல்லது அவர் சேவையிலிருக்கும் பொழுது இறக்க நேரிட்டால், சந்தர்ப்பத்திற்கேற்றவாறு, அவருக்கு அல்லது அவரது நியமத்தருக்கு (நியமித்தர் இல்லாத பட்சத்தில் அவரது சட்டப்படியான பின்னுரிமையாளர்களுக்கு) கொடுக்கப்படுதல் வேண்டும்.

(2) தவறுகை காரணமாய் உறுப்பாண்மை இழக்கப்பட்டால், உறுப்பாண்மையை மீளப்பெறுவதற்கென அளிக்கப்பட்ட காலத்தினுள் அவ்வாறு மீளப் புதுப்பிக்காதவிடத்து, தவறுகை தொடங்கிய தேதியிலிருந்து உறுப்பினர் விலகிக் கொண்டதாகக் கருதப்படும்.

(3) 1.1.1968 இல் அல்லது அதற்குப் பின்னர் ஏற்படும் உறுப்பாண்மை முடிவுறுத்தலுக்கே, திருத்தப்பட்டவாறான விதிவலுவுடையதாதல் வேண்டும்.

*கொடுபட வேண்டிய நன்கொடைகளிலிருந்து சங்கத்துக்கு வருமதியானவற்றை அறவிடுதல்.*

33. இவ்விதிகளின்கீழ் உறுப்பினரின் கணக்கில் வரவிலிருக்கும் தொகையிலிருந்து சங்கத்துக்குச் சேரவேண்டிய எல்லாக் கடன்களையும் அறவிட்முடியாவிடின், சங்கத்திற்கு வருமதியாயிருக்கும் அம்மீதித் தொகை, உறுப்பினருக்கு அல்லது அவரால் நியமத்திருக்கு அல்லது அவரது சட்டப்படியான பின்னுரிமையாளருக்கு சங்கத்தால் கொடுபடவேண்டிய எப்பணத்திலிருந்தாகிலும் அறவிடப்படும்.

*இறுதிக்கோரிக்கைகளிலிருந்து 1953 ஆம் ஆண்டுக்கு முன்னை தொழில் நட்ட நீக்க கட்டண நிலுவைகள் அறவிடப்படுதல்.*

34. எல்லா உறுப்பினர்கள் தொடர்பிலும் கொடுக்குமதிகளின் இறுதித் தொகைக் கணிப்பீட்டுக்காகக் கீழ்க்கண்டவை விதிக்கப்படும் :—

- (அ) உறுப்பாண்மையில் 1.1.1953 க்கு முன் நிறைவுபெற்ற ஒவ்வொரு வருடத்திற்கும் ரூபா மூன்று ;
- (ஆ) உறுப்பாண்மையில் 1.1.1953 க்குப் பின்னர் 1.1.1964 வரை நிறைவுபெற்ற ஒவ்வொரு வருடத்திற்கும் ரூபா ஆறு ;
- (இ) உறுப்பாண்மையில் 1.1.1964 இல் இருந்து உறுப்பாண்மை நிறுத்தப்பட்ட தேதிவரை உள்ள நிறைவுபெற்ற ஒவ்வொரு வருடத்திற்கும் ரூபா நான்கு. வருடத்தில் இறுதிப் பகுதிக்கான அறவீடு, மார்ச்சு மாதத்தில் உறுப்பாண்மையிலிருந்திருப்பின் ரூபா இரண்டு வீதமும் திசெம்பர் மாதத்தில் உறுப்பாண்மையிலிருந்திருப்பின் ரூபா நான்கு வீதமும் செய்யப்படும் ;
- (ஈ) 3 (ஆ) என்னும் விதியின் கீழ் செய்யப்பட்ட அறவிடல்களுக்கு வரவளிக்கப்படும்.

*நியமிப்பு.*

35. (1) உறுப்பினரின் மரணத்திற்குக் குறைந்தது ஒரு முழு மாதத்திற்கு முன்பு, அவரது கைச்சாத்துடன் செய்யப்பட்ட அத்தகைய நியமிப்பானது, செயலாளரும் கணக்காளருமானவரால் பதிவு செய்யப்படுவதற்காக அவருக்குக் கிடைக்கும்படி சேர்ப்பிக்கப்பட்டாலன்றி, அத்தகைய நியமிப்பெதுவும் செல்லுபடியாகாது ;

(2) நியமிப்பில் குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய அத்தகைய பங்கு முறையிலோ விகிதாசாரப்படியோ நலவுதவிகளைப் பெறும் வகையில் ஒன்றுக்கு மேற்பட்டவர்களை நியமிப்பதற்கு ஓர் உறுப்பினருக்கு உரித்துண்டு. அவ்வித நியமிப்பில் அவ்வித விகிதசமம் குறிப்பிடப்படாதபட்சத்தில், கொடுபடவேண்டிய தொகை நியமித்தர்களிடையே சமமாகப் பிரித்துக் கொடுக்கப்படல் வேண்டும்.

(3) எந்நேரத்திலாவது உறுப்பினரொருவர் அவரது நியமிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக வேறொரு நியமிப்பைச் செய்யலாம். அவ்வித நீக்கல் அத்துடன்/அல்லது நியமிப்பு, பதிவு செய்யப்படுவதற்காக செயலாளரும் கணக்காளருமானவருக்கு உறுப்பினரின் மரணத்திற்குக் குறைந்தது ஒரு முழு மாதத்திற்கு முன் கிடைக்கும்படி சேர்ப்பிக்கப்படல் வேண்டும். அவ்விதமில்லாவிடில், முறையாகப் பதிவு செய்யப்பட்டுள்ள நியமிப்புக்கு இணங்க கொடுப்பனவு வழங்கப்படும்.

*சங்கத்துக்குக் கொடுக்க வேண்டிய தொகைகளை கொடுப்பதில் தவறுகை.*

36. (1) ஒரு உறுப்பினர் தொடர்ந்து ஆறு மாதங்களுக்குக் கொடுப்பனவுகளில் தவறினால் அவர் உறுப்பாண்மையை இழத்தல் வேண்டுமென்பதுடன் சங்கத்திலிருந்தும் விலகிக் கொண்டவராகக் கருதப்படுதல் வேண்டும். அத்தகைய இழப்பு ஏற்பட்ட ஆறு மாத காலங்களுக்குள் அவர் எழுத்துமூலம் விண்ணப்பிக்குமிடத்து அவரை மீளவும் உறுப்பினராக்கும் தத்துவம் குழுவிற்குண்டு ; ஆயின், அவ்வுறுப்பினர் உறுப்பாண்மையில் மீளவும் சேர்ந்த தேதிவரை சங்கத்தில் தொடர்ந்து உறுப்பினராயிருந்தவராக செலுத்தப்படவேண்டியவை முழுவதும் செலுத்தப்படல் வேண்டும்.

(2) உதவுதொகை செலுத்தப்படவேண்டிய மாதத்தின் முதல் தேதியிலிருந்து தவறுகை தொடங்கும்.

*மரணச் செலவுகளுக்கான முற்பணம்.*

37. (1) ஓர் உறுப்பினர் மரணமடைந்துவிட்டாரென்ற எழுத்து மூல அறிவித்தல் செயலாளரும் கணக்காளருமானவருக்கு கொடுபடுமிடத்து, அவர் அவ்வுறுப்பினரின் கைம்பெண்ணுக்கோ நியமித்தர்களில் ஒருவருக்கோ, ஐந்நூறு (ரூபா 50.) ரூபாவிற்கு மேற்படாத ஒரு தொகையை அவ்வுறுப்பினரின் ஈமச்சடங்குகளுக்காகக் கொடுக்கலாம் ; இத்தொகை, அவ்வுறுப்பினர் சார்பில் சங்கத்தால் செலுத்தப்படவேண்டிய எப்பணத்திலிருந்தாவது கழித்துக்கொள்ளப்படும்.

(2) சங்க உறுப்பினரொருவர் அல்லது சமாதான நீதிபதி அல்லது கிராம சேவகர், செயலாளரும் கணக்காளருமானவரும் திருத்திப்படும்வகையில் மரணம் சம்பவித்தமைபற்றி உறுதிப்படுத்தும் பட்சத்தில் மாத்திரமே இத்தொகை வழங்கப்படும்.

*பராயமடையாதவர்கள் பணங்கள்.*

38. சங்க விதிகளின் கீழ் பராயமடையாதவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய பணங்கள் யாவும் தேசிய சேமிப்பு வங்கியில் அவர்களது பெயர்களில் வைப்பாக இடப்படும். பற்று வரவுப் புத்தகம் செயலாளரும் கணக்காளருமானவரின் கட்டுக்காப்பிலிருக்கும்.

## அத்தியாயம் 3—நன்கொடை, உதவுதொகைக் கடன்கள்

39. (1) முகாமைக் குழு அதன் தற்றுணிபிற்கமைய 40, 41 ஆம் விதிகளில் குறிப்பிடப்பட்ட தொகைகளின் ஆகக் கூடுதலான தொகைவரையிலான கடன்களை வழங்கலாம். ஆயின், எவ்வாறுயினும், சம்பள அடிப்படையில், கூடுதலான கடனுரிமையை அனுபவித்து வந்த எவரேனும் உறுப்பினர், புதுக்கடனுரிமையின் கீழ் சீராக்கல் பயனுறும் வரையிலும், அதே கடனுரிமையைத் தொடர்ந்தும் பெறுவார்.

*நன்கொடைக் கடன்களும் உதவு தொகை கடன்களும்.*

(2) 40, 41, 59 ஆகிய விதிகளின் கீழான கடனுரிமைகளுக்கு மேலதிகமாக ஐந்து ஆண்டுகளுக்குக் குறையாத காலத்திற்கு உறுப்பாண்மை கொண்டிருக்கும் உறுப்பினர்க்கு (அவர் அல்லது அவரது மனைவி/கணவன்/அல்லது அவரது பிள்ளைகளுள் ஒருவர் அல்லது அவரது தந்தை/தாய் சம்பந்தமாய் ஏற்பட்ட) ஏதாவது சம்பவம் நிகழ்ந்த மூன்று மாதங்களுக்குள் அது சம்பந்தமாக தேவைப்பட்ட ஆவணங்களுடன் அவர் விண்ணப்பித்தால், தனது தற்றுணிபின்பேரில் கீழ்க்காணும் தொகைகள் வரை கடன் வழங்குதல் முகாமைக் குழுவிற்குச் சட்டமுறையானதாகும் :—

- (அ) உறுப்பினரின் திருமணத்திற்கு—ரூபா 500.
- (ஆ) அவரது பிள்ளையின் திருமணத்திற்கு—ரூபா 400.
- (இ) மனைவி/கணவன் இறப்பிற்கு—ரூபா 500.
- (ஈ) பிள்ளை அல்லது தந்தை/தாய் இறந்தால்—ரூபா 300.

இக்கடன் ஒவ்வொன்றும் ரூபா 20 கொண்ட மாதாந்தத் தவணைக் கட்டணங்களாக அறவிடப்படும்.

மேலே குறிப்பிடப்பட்ட மரணம் நேரும் சந்தர்ப்பத்தில் மாவட்ட அரசிறை அலுவலரின் சான்றிதழொன்றின் பேரில் அல்லது கிராம சேவகரால் அளிக்கப்பட்டதும் மாவட்ட அரசிறை அலுவலரால் புறக்குறிப்பிடப்பட்டதுமான சான்றிதழொன்றின் பேரில் அல்லது உள்ளூர் அதிகாரசபையின் தவிசாளரால் அளிக்கப்பட்ட சான்றிதழொன்றின் பேரில் கடன் வழங்கப்படலாம்.

40. கீழ்க்காணும் வகையில் நன்கொடைக் கடன் வழங்கப்படலாம் :—

(1) முதல்வருட உறுப்பாண்மைக்கு ரூபா 100 ;

(2) இரண்டாவது வருட உறுப்பாண்மையிலிருந்து ஒவ்வொரு வருடத்திற்கும் மேலதிகமாக ரூபா 50 வீதம் ஆகக்கூடியது ரூபா 800 வரையும் ;

(3) பதினொருவது வருட உறுப்பாண்மையிலிருந்து ஒவ்வொரு வருடத்திற்கும் மேலதிகமாக ரூபா 30 வீதம் ஆகக்கூடியது ரூபா 1,220 வரை.

**உதவுதொகைக் கடன்கள்.**

41. உதவுதொகையின் பேரில் பெறக்கூடிய ஆகக்கூடிய கடன், உறுப்பினரின் பேரில் ஒவ்வொரு வருட சனவரி மாத முதல் தேதியில் அவர் கணக்கில் வரவிலிருக்கும் உதவுதொகையில் தொண்ணூறு சதவீதமாகும். கொடுபடும் கடன் தொகை கணக்கிடப்படும் நோக்கத்திற்கு, ஒரு மாதத்தில் அறவிடும்படி அறிவிக்கப்பட்ட தவணைக்கட்டணத் தொகை, அம்மாதத்தின் 10 ஆந் தேதியன்றோ அதற்குப் பிறகோ அவர் கணக்கில் வரவாகக் கருதப்படும்.

**கடன்களின் எண்ணிக்கை.**

42. எந்த நிதிவருடத்திலும் 39 ஆவது விதியின் கீழான புதுப்பித்தல்கள் உட்பட கொடுக்கப்படக்கூடிய கடன்கள் எட்டுக்கு மட்டுப்படுத்தப்பட்டதாகும்.

43. கடன்களைக் கட்டுப்படுத்துவதற்குக் குழுவிற்கு அதிகாரமுண்டு.

**கடன்களைத் திருப்பிச் செலுத்தல்.**

44. (அ) 39 (2) ஆவது விதியின்கீழ் வழங்கப்பட்ட கடன்கள், அவை வழங்கப்பட்ட மாதத்தை அடுத்த மாதத்திலிருந்து நூறு மாதங்களுக்கு அதிகப்படாத தவணைக் கட்டணங்களில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டும் ; ஆயின் மாதாந்தத் தவணைக் கட்டணத் தொகை ஐந்து ரூபாவிற்குக் குறையலாகாது ;

(ஆ) மார்ச்சு, திசம்பர் ஆகிய மாதங்களில் இக்கடன்களின் சார்பில் உறுப்பினர்களிடமிருந்து எவ்வித கழிவும் செய்யப்பட மாட்டாது ; ஆயினும் கடன்களுக்குரிய வட்டி இம்மாதங்களில் அறவிடப்படும்.

**கடன் விண்ணப்பம்.**

45. கடன்கோரும் விண்ணப்பகாரர் முகாமைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட விதமாக, விண்ணப்பப் படிவம் உறுதியுரைப் படிவம் ஏனைய ஆவணங்கள் ஆகியவற்றை நிரப்புதல் வேண்டும்.

**கொடுபட வேண்டிய வட்டி.**

46. சங்கத்திடம் பெற்றுக்கொண்ட பணங்களுக்காக, ஒவ்வொரு மாதமும் கொடுபடவேண்டிய வட்டி, 1.6.62 தொடக்கம் ஒவ்வொரு மாத முடிவிலும் கொடுக்குமதியாயுள்ள தொகையில் ஆண்டுக்கு 7 சதவீதமாயிருத்தல் வேண்டும். வட்டிக் கணக்குக் கணிப்பிடப்படும்போது, பின்னவீத மாதம் பதினைந்து நாட்களுக்கு அதிகரித்தால் முழு மாதமாகக் கணிக்கப்படும் ; பதினைந்தும் அதற்குக் குறைந்த நாட்களும் அரை மாதமாகக் கணிக்கப்படும். வட்டி கொடுபடவேண்டிய நாள் ஒரு முழு மாதத்தின் கடைசி நாளாகும். கடன்பெற்ற மாதத்திற்கு அடுத்த முழு மாதத்தின் கடைசி நாளில் வட்டியின் முதல் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.

**நிராகரிப்பிற்கான காரணங்கள்.**

47. காரணங்கள் காட்டாமலே விண்ணப்பங்களை நிராகரிப்பதற்கு முகாமைக்குழுவிற்குத் தகுதியுண்டு. கடன் வழங்கு வதற்கு முன், முகாமைக்குழு தன் தற்றுணிபுக்கமைய அது விரும்பும் தகவல்களையும் அத்தாட்சிகளையும் கேட்டுப் பெறலாம்.

**நிலுவைகள்.**

48. உறுப்பினரொருவர் கடனுக்கு விண்ணப்பிக்கும்பொழுது, உறுப்பினரின் உதவுதொகைகள், கடன் தவணைப் பணங்கள், ஏனைய கொடுக்குமதிகள் ஆகியவை நிலுவையிலிருப்பின், அத்தகைய கொடுக்குமதிகளின் எல்லாநிலுவைகளும் அவரின் சேமிப்பு உதவுதொகைகளிலிருந்து கடனாக அல்லது மீளப் பெறுதலாக அவருக்குக் கிடைக்கக்கூடிய தொகையிலிருந்து அத்தகைய நிலுவைகள் எல்லாம் அறவிடப்பட்டாலன்றி அவ்வுறுப்பினருக்குக் கடனெதுவும் வழங்கப்படமாகாது.

**தவணைக்கட்டணத் தவணையெண்ணிக்கைகளைக் குறைத்தல்.**

49. முகாமைக்குழு அதன் தற்றுணிபுக்கமைய தவணைக் கட்டணங்களின் தவணையெண்ணிக்கையைக் குறைப்பதற்கு அல்லது எந்நேரத்திலாவது கடன்களைத் திருப்பித் தருமாறு கேட்பதற்கு உரிமையுண்டு.

**கொடுக்குமதிகளைச் சேர்ப்பித்தல்.**

50. சம்பளத் தொகுப்பிலிருந்தும் தவணைக் கட்டணங்களைக் கழித்து அவற்றை செயலாளரும் கணக்காளருமானவருக்கு அனுப்பிவைப்பதை உறுப்பினர் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**தவறுகை.**

51. (1) கடன் அத்துடன்/அல்லது வட்டி சம்பந்தமான தவணைக் கட்டணங்களைத் தொடர்ந்து ஆறு மாதங்களுக்கு ஓர் உறுப்பினர் செலுத்தத்தவறினால் அவர் தமது உறுப்பாண்மையை இழத்தல் வேண்டுமென்பதுடன் சங்கத்திலிருந்தும் விலகிக்கொண்டவராகக் கருதப்படுதல் வேண்டும். கொடுக்குமதியாயிருக்கும் ஏதேனும், மீதிப் பணம், அவர் கைச்சாத்திட்ட அதிகாரக் கடிதத்திலுள்ள நியதிகளின்படி அறவாக்கப்படும். தவணைக்கட்டணங்கள் நிலுவையாயுள்ள உறுப்பினர்கள் செய்யும் எக்கொடுப்பனவும் முதலில் வட்டிக்கும் தீர்க்கப்படாத மீதிக் கடன் எதற்கேனும் பிரயோகிக்கப்படும்.

(2) தவணைக் கட்டணங்கள் எந்த மாதம் தொடர்பில் கொடுக்குமதியாயுள்ளதோ அந்த மாதத்தின் முதலாம் தேதியிலிருந்து கொடுப்பனவுத் தவறுதல்கள் தொடங்கும்.

52. உறுப்பினர்கள், முன்னைநாள் உறுப்பினர்கள், பிற ஆட்கள் ஆகியோரிடமிருந்து சங்கத்திற்கு வருமதியாயுள்ள வற்றை அறவிடுவதற்குச் சட்ட நடவடிக்கை நீங்கலாயில்லாத எல்லா நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு முகாமைக்குழுவிற்கு முழுத் தத்துவமும் உண்டு.

53. எவ்வாறுயினும் ஓர் ஆள் அவ்வாறு உறுப்பாண்மையை இழந்த ஆறு மாதங்களுள் எழுத்துமூலம் விண்ணப்பித்த லின்பேரில் அத்தகைய ஆளை மீளவும் உறுப்பினராக்கும் தத்துவம் குழுவிற்குண்டு ; ஆயின் சங்கத்தில் தொடர்ந்து உறுப்பினராய் இருந்ததுபோன்று மீளப் புதுப்பித்தல் தேதிவரை அவர் கொடுக்குமதியாயிருந்த முழுத்தொகையும் செலுத்தப்படுதல் வேண்டும்.

**கடன்களை முன் கூட்டியே தீர்த்தல்**

54. எவ்வுறுப்பினரும் அவரது கடனைத் தீர்ப்பதற்கு விரும்பினால் குறிக்கப்பட்ட காலத்திற்கு முன்னரே அதனைத் தீர்க்கலாம்.

**வருமதிகளை அறவிடுதல்.**

55. இளைப்பாறும்போது அல்லது விலகும்போது அல்லது சேவையிலிருந்து வேலைநீக்கம் செய்யப்படும்போது அல்லது சங்கத்திலிருந்து விலகிக்கொள்ளும்போது அல்லது மரணமடையும் போது உறுப்பினரால் கொடுக்குமதியான ஏதேனும் தீர்க்கப்படாத கடன் அல்லது வட்டி, அவருக்கோ, அவரால் நியமிக்கப்பட்டவர்களுக்கோ அத்தகைய நியமித்தர்கள் இல்லாத பட்சத்தில் அவரது சட்டப்படியான பின்னுரிமையாளர்களுக்கோ செலுத்தற்பாலதாகக் கூடிய தொகையிலிருந்து கழிக்கப்படும். சங்கத்திலிருந்து விலகும் உறுப்பினர்களிடமிருந்து அறவிடப்படாது மேலும் சங்கத்திற்கு வருமதியாயிருக்கும் ஏதேனும்

மீதியும் தீர்க்கப்படாதிருக்கும் மீதிக் கடன்கள், வட்டிகள் ஆகியனவும் உறுப்பினரால் கைச்சாத்திட்ட அதிகாரக் கடிதத்தில் குறிப்பிடப்பட்ட நியதிகளின்படி அல்லது முகாமைக்குழு தீர்மானிக்கக்கூடிய வேறெந்த வகையினூலும் அறவிடப்படல் வேண்டும்.

## அத்தியாயம் 4—சேமிப்புத் திட்டம்

56. 1.10.1957 க்குமுன் திட்டத்தில் சேர்ந்தோர் விடயத்தில் 1.1.1956 இல் இருந்து அல்லது அதன் பின்னர் சேமிப்புத் திட்டத்தில் உறுப்பாண்மை தொடங்கும்; 1.10.1957 க்குமுன் சங்கத்தில் சேர்ந்தோருக்கு 1.10.1957 இல் இருந்தும், 30.9.1957 க்குப் பின் சங்கத்தில் சேருவோருக்கு சங்கத்தில் சேர்ந்த தேதியிலிருந்தும் உறுப்பாண்மை தொடங்கும்.

57. (1) சங்கத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் மாதாந்தம் மூன்று ரூபா அல்லது (அத்தொகையின் ஒரு முழு ரூபாவின் பெருக்கமாக) கூடுதலாக உதவுதொகை செலுத்தல் வேண்டும். அத்தொகை வேதனத் தொகுப்பிலிருந்தும் கழிக்கப்பட்டு மாத இறுதியில் செலுத்தப்படுதல் வேண்டும். செயலாளரும் கணக்காளருமானவருக்கு இத்தொகை மாதாமாதம் அனுப்பப்படுவதை ஒவ்வொரு உறுப்பினரும் உறுதி செய்தல் வேண்டும். எந்தவொரு வருடத்திலும் உதவு தொகையில் குறைப்போ, அதிகரிப்போ சனவரி 1 ஆந் தேதி அல்லது யூலை 1 ஆந் தேதியில் மாத்திரமே செய்யமுடியும், புறநடையான சூழ்நிலையில் முகாமைக்குழு இத்தேதிகளில் மாற்றமேற்படுவதை அனுமதிக்கலாம்.

(2) ஒரு ரூபாவிலிருந்து இரண்டு ரூபாவான அதிகரிப்பு 1.6.1968 தொடக்கம் நடைமுறைக்குவரும். இரண்டு ரூபாவிலிருந்து மூன்று ரூபாவிற்கான அதிகரிப்பு 1.1.1973 இல் இருந்து நடைமுறைக்கு வரும்.

58. (1) அவ்விதம் செலுத்தப்பட்ட உதவுதொகை ஒவ்வோர் உறுப்பினரினதும் தனிப்பட்ட கணக்கில் வரவு வைக்கப் பட்டு அவரது பற்றுவரவுப் புத்தகத்தில் பதிவு செய்யப்படும். ஒவ்வோர் ஆண்டின் இறுதியிலும், அவ்வாண்டில் ஆரம்பத்தில் சேர்ந்த வட்டி உட்பட சேமிப்புத் திட்டத்தில் உறுப்பினரின் கணக்கில் வரவிலிருக்கும் தொகையிலிருந்து, அவ்வருடத்தில் மீளப்பெறப்பட்ட தொகை கழிக்கப்பட்டபின் உள்ள தொகையில் வட்டி சேரும். வட்டி 4½ சதவீதமாகும்; இது சங்கத்தின் இலாபத்தில் சாட்டுதல் செய்யப்படக்கூடிய பொறுப்பாகும்.

(2) உறுப்பாண்மை நிறுத்தப்படும் பட்சத்தில் நிறைவான கடைசி உறுப்பாண்மை மாதம் வரையிலான ஒவ்வொரு முழு மாதத்திற்கும் வட்டி வழங்கப்படும்.

(3) வருடத்திற்கு 4½ சதவீத வட்டியானது 1.1.1972 முதல் நடைமுறைக்கு வரும்.

59. (1) சேர்ந்த வட்டியுடன் கூடிய உதவுதொகை, சங்கத்துக்கு வருமதியான தொகைகள் கழிக்கப்பட்டபின், உறுப்பாண்மை முடிவுறும்போது அல்லது சங்க விதிகளின் பிரகாரம் இத்திட்டம் மீளப் பெறப்படும் பொழுது, திருப்பிச் செலுத்தப்படும்.

(2) முகாமைக்குழுவின் தற்றுணிபுக்கமைய உறுப்பினரொருவர் ஒரு முழு வருடத்தில் தம் பெயரில் வரவு வைக்கப் பட்டிருக்கும் உதவுதொகையில் 25 சதவீதத்தினையும், ஆகக்குறைந்த உதவுதொகைக்கும் அதிகமான உதவுதொகையைச் செலுத்தியோர் அத்தகைய உதவுதொகைகள் ஏதும் இருப்பின் அவற்றில் 25 சத வீதத்தினை மேலதிகமாயும் மீளப் பெற்றுக் கொள்வதற்கு அனுமதிக்கப்படுவர். அவ்வாறு அனுமதிக்கப்படும் ஆகக்குறைந்த தொகை இருபத்தைந்து ரூபாவிற்குக் குறையாமலிருத்தல் வேண்டும்.

60. 40, 41 ஆகிய விதிகளின் கீழான கடன் உரித்துக்கள் முகாமைக் குழுவின் தற்றுணிபுக்கமையச் சேமிப்புத் திட்டத்தில் உறுப்பினரின் பெயரில் வருடத் தொடக்கத்தில் வரவிலிருக்கும் உதவுதொகையிலிருந்து மீளப் பெறப்பட்ட தொகை கழித்து மீதியிருக்கும் தொகையில் 50 சதவீதத்தால் அதிகரிக்கப்படலாம். கடனாக வழங்கப்படும் ஆகக்குறைந்த தொகை இருபத்தைந்து ரூபாவுக்குக் குறைவாக இருத்தலாகாது.

## அத்தியாயம் 5—இடுக்கண் கடன்கள்

61. உறுப்பினரொருவரின் சுகவீனக் காலத்தில் அல்லது அவரின் குடும்ப அங்கத்தவரொருவரின் சுகவீனக் காலத்தில் அல்லது திருப்திகரமானதெனக் கருதப்படக்கூடிய வேறு ஏதேனும் காரணத்தின் பொருட்டு முகாமைக்குழு அதன் தற்றுணி புக்கமைய இடுக்கண் கடனொன்றினை வழங்கலாம். இவ்வத்தியாயத்தின் கீழ் வழங்கப்படும் கடன்கள் 3 ஆம் அத்தியாயத்தின் கீழ் வழங்கப்படும் கடன்களை விட முன்னீடுடையமாட்டா; அத்துடன் உறுப்பினர்களிடமிருந்தும் வருமதியாகவுள்ள கடன்களின் மொத்தத் தொகை எச்சந்தர்ப்பத்திலாயினும் 25,00,000 (இருபத்தைந்து இலட்சம் ரூபா) ரூபாவிற்கு அதிகரித்தலாகாது.

62. (1) மூன்று முதல் ஐந்து வருட உறுப்பாண்மை கொண்டவர்களும் தத்தம் பதவிகளில் உறுதிப்படுத்தப்பட்டவர்களு மாயுமுள்ள உறுப்பினர்களுக்கு அதே தகுதியுடைய வேறோர் உறுப்பினர் அல்லது ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட உறுப் பாண்மை கொண்ட உறுப்பினரொருவர் உத்தரவாதமளிப்பதன் பேரில் ஆகக்கூடியது ஐந்நூறு ரூபாவரை இடுக்கண் கடன் வழங்கப்படலாம்.

(2) ஐந்து வருடத்திற்கு மேற்பட்ட உறுப்பாண்மை கொண்ட உறுப்பினரொருவருக்கு 5 வருடத்திற்கு மேற்பட்ட உறுப்பாண்மை கொண்ட மற்றோர் உறுப்பினர் உத்தரவாதமளிப்பதன் பேரில், ஆகக்கூடியது ஓராயிரம் ரூபா வரையிலான இடுக்கண் கடன் வழங்கப்படலாம்.

63. இடுக்கண் கடன் தொடர்பான விண்ணப்பகாரர் முகாமைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட படிவமொன்றை நிரப்பிக் கொடுப்பதுடன், அவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட காரணங்களை நிரூபிப்பதற்குத் தக்க சான்றுகளையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

64. இடுக்கண் மீதிலான வட்டி, வருடத்திற்கு 7 சதவீதமாகும்.

65. கடன் அறவீடுகள், கடன் வழங்கப்பட்ட மாதத்தினை அடுத்த மாதத்திலிருந்து தொடங்கி 40 மாதங்களுக்கு மேற்படாத தவணைக் கட்டணங்களில் முற்றுப்பெறல் வேண்டும்.

66. 3 ஆம் அத்தியாயத்தின் 42, 47, 48, 49, 50, 51, 52 ஆகிய விதிகள் இவ்வத்தியாயத்திற்கு ஏற்புடைத்தாகும். இதில் ஏற்பாடு செய்யப்படாத விடயங்கள் எவற்றின் பொருட்டும் 1 ஆவது அத்தியாயத்தின் 24 ஆம் விதி ஏற்புடைத்தாகும்.

67. வீடு திருத்தற் கடனுக்கான முன்னைய திட்டத்தின் கீழ் கடனொன்றினை ஏற்கெனவே பெற்ற அத்துடன்/அல்லது உத்தரவாதமளித்த உறுப்பினர் அவ்வாறு அவரால் பெறப்பட்ட அத்துடன்/அல்லது உத்தரவாதமளிக்கப்பட்ட வீடு திருத்தக் கடன் முழுவதும் திருப்பிக் கொடுக்கப்பட்ட பின்னர் மாத்திரமே, இந்த அத்தியாயத்தின் கீழ் இடுக்கண் கடனுக்கு உரித்துடைய வராவர் அல்லது உத்தரவாதமளிக்க முடியும்.

### அத்தியாயம் 6—வீட்டுச் சொத்துக் கடன்

*வீட்டுச்சொத்தின் பேரில் கடன்கள் வழங்குவதற்கான குழு.*

68. பின்வரும் நோக்கங்களின் பொருட்டு உறுப்பினருக்கு அல்லது அவரது மனைவிக்குச் சொந்தமான வீட்டுச் சொத்து அல்லது காணியைப் பிணையாக வைத்துச் சங்க உறுப்பினர்களுக்குக் குழு அதன் தற்றுணிபின்பேரில் கடன்கள் வழங்கலாம். :—

(1) வீடமைத்தல் ;
(2) வதிவிடத்திற்கு மேலதிக இணைப்புக்களை மேற் கொள்ளல் அத்துடன்/அல்லது திருத்தங்கள் ;
(3) குடியிருப்பதற்கான வீடு கொள்வனவு செய்தல் ;
(4) தனது சொந்தக் குடியிருப்பு நோக்கத்தின் பொருட்டு காணித்துண்டு கொள்வனவு செய்தல்.

இவ்வத்தியாயத்தின் கீழ் உறுப்பினர்களிடமிருந்து வருமதியாகவுள்ள கடன்களின் மொத்தத் தொகை எச்சந்தர்ப்பத்திலாயினும் 50,00,000 ரூபாவிற்கு மேற்படலாகாது.

*கடன்களுக்கான விண்ணப்பங்கள் எவ்வாறு எப்போது செய்து கொள்ளல்.*

69. செயலாளரும் கணக்காளருமானவரிடமிருந்து பெற்றுக் கொள்ளப்படக்கூடிய விதித்துரைக்கப்பட்ட ஒரு படிவத்தில் கடனுக்கான விண்ணப்பம் செய்யப்படல் வேண்டும் ; மும்மொழிகளிலும் செய்திப் பத்திரிகைகளில் வெளியிடப்படும் அறிவித்தலின் மூலம் வீட்டுச் சொத்துக் கடன்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும்.

*கடன்கள் வழங்கப்படலாமா என்பதைத் தீர்மானிப்பதற்கான குழு.*

70. செயலாளரும் கணக்காளருமானவரினால் பெற்றுக் கொள்ளப்பட்ட ஒழுங்கில் விண்ணப்பங்கள் பதிவுசெய்யப்பட்டுக் குழுவின் தீர்மானத்திற்கெனச் சமர்ப்பிக்கப்படும். காணி உரித்துறுதியின்மீது சங்கத்தின் வழக்கறிஞர்களிடமிருந்து திருத்திகரமான அறிக்கையும் முகாமைக்குழுவால் நியமிக்கப்பட்ட கணிப்பாளரிடமிருந்து உரித்துறுதி மீதான கணிப்பறிக்கையொன்றும் பெற்ற பின்னர் மாத்திரமே கடன்கள் வழங்கப்படும்.

*கடன் வழங்காது குழுவினால் நிராகரிக்கலாம்.*

71. விண்ணப்பிக்கப்பட்ட தொகை முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ குழு வழங்கலாம் ; அல்லது விண்ணப்பிக்கப்பட்ட தொகை முழுவதையுமோ அதன் ஏதேனும் ஒரு பகுதியையோ காரணங்காட்டி வழங்க மறுக்கலாம்.

*அடைமான முறிகளும் செலவுகளும்.*

72. (1) குழுவினால் நியமிக்கப்பட்ட நொத்தாரிசினால் தேவையான அடைமான முறி தயாரிக்கப்பட்டு அத்தாட்சிப் படுத்தப்படும் ; அத்துடன் கடன் பொருட்டுச் செய்யப்படும் சட்டரீதியான செலவுகளனைத்தும் கடன் பெறுபவராலேயே ஏற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

(2) 5,000 ரூபாவிற்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்குமான கடன்களின் பொருட்டு, சங்கத்தினால் தீ அபாயக் காப்புறுதிப் பத்திரங்கள் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும்.

(3) தீ அபாயக் காப்புறுதிப் பத்திரங்கள் சம்பந்தமான கொடுப்பனவுகள் சங்கத்தினால் முன்கூட்டியே செலுத்தப்படும் என்பதுடன் 77 ஆவது விதியில் குறிப்பிடப்பட்டுள்ள வாருன வட்டியுடன் இத்தொகை, சம்பந்தப்பட்ட உறுப்பினர்களிடமிருந்து, மார்ச்சு, திசெம்பர் மாதங்களுட்பட பன்னிரண்டு மாதாந்தத் தவணைக்கட்டணங்களில் அறவிடப்படும்.

*அனுமதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய ஆகக்குறைந்த கடன்கள்.*

73. (1) அனுமதிக்கப்படக்கூடிய ஆகக்கூடிய தொகை 20,000 ரூபாவாகும் ; பிணையாக அளிக்கப்பட்ட சொத்தின் கணிக்கப்பட்ட பெறுமதியின் அறுபது சத வீதத்திற்கு மேல் கடன்தொகை எச்சந்தர்ப்பத்திலும் அதிகரித்தலாகாது. அனுமதிக்கப்படக்கூடிய ஆகக்குறைந்த தொகை 2,000 ரூபாவாகும்.

இந்த அத்தியாயத்தின் 68 ஆம் விதியின் 2 ஆம் பந்தியின் திருத்தங்களின் பொருட்டு வழங்கப்படக்கூடிய ஆகக்கூடிய தொகை 5,000 ரூபாவிற்கு அதிகரித்தலாகாது.

(2) வீடமைப்பதற்குக் கடன் கோரிய உறுப்பினராற் பிணையாக அளிக்கப்பட்ட காணியின் பெறுமதி போதாதிருக்கும் பட்சத்தில், பிணையாக அளிக்கப்பட்ட காணியின் ஏற்றமடைந்துள்ள பெறுமதிக்கு சமவிகிதமாக கடன் தொகை பின்வரும் அடிப்படையில் தவணைக் கட்டணங்களில் வழங்கப்படலாம் :—

(அ) 1 ஆவது தவணைக்கட்டணம்—அடைமான முறி நிறைவேற்றப்பட்டுப் பதிவு செய்யப்பட்டதன் மேல்.
(ஆ) 2 ஆவது தவணைக்கட்டணம்—ஈரத்தடைமட்ட நிலையை அத்திவாரம் அடைந்ததும்.
(இ) 3 ஆவது தவணைக்கட்டணம்—கூரைமட்ட அளவிற்குச் சுவர்கள் அமைக்கப்பட்டு யன்னல், கதவு, நிலைகள் பொருத்தப்பட்டதும். (கூரைவேலை முடிந்தபின்னரே யன்னல், கதவு நிலைகள் பொருத்தப்படவேண்டுமென அமைப்புத்திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருப்பின் இவ்வினங்கள்மீது செலுத்தற்பாலதான கடன்தொகை தடுத்து வைக்கப்படும்).
(ஈ) 4 ஆவது தவணைக்கட்டணம்—கூரை வேலை முடிந்தவுடன்.
(உ) 5 ஆவது தவணைக்கட்டணம்—முழு வீடும் திருப்திகரமாகப் பூர்த்தியாக்கப்பட்டுத் தேவையானவிடத்து தீ அபாயக் காப்புறுதிச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளப்பட்டு, உள்ளூரதிகார சபையினால் அளிக்கப்பட்ட ஒத்திசைவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட்டதன் மேல்.

(3) முதலாவது தவணைக்கட்டணம் வழங்கப்பட்டதிலிருந்து ஓராண்டிற்குள் கட்டட வேலைகள் பூர்த்தியாக்கப்படுதல் வேண்டும். எனினும் கடன் பெறுபவரினால் தகுந்த காரணங்கள் அளிக்கப்படுமாயின், பூர்த்தியாக்கற் காலத்தை மேலும் ஆறு மாதங்களுக்கு முகாமைக்குழுவால் நீடிக்க முடியும்.

*பிணையாக அளிக்கப்பட்ட காணிகள் எவ்வெல்லைக்குள் அமைந்திருத்தல் வேண்டும்.*

74. கடனுக்காகப் பிணையாக அளிக்கப்பட்ட காணியானது எவ்வுள்ளூராட்சிச் சபையினதும் செயலாட்சி எல்லைகளுக்குள் அமைந்திருக்கலாம்.

*உறுப்பினர்களின் தகுதி.*

75. சங்கத்திற் குறைந்தது ஐந்து ஆண்டுகளாவது உறுப்பினராயிருப்பதுடன் கடன் விண்ணப்பிக்கப்பட்ட தேதியில் ஐம்பது வயதிற்கு மேற்படாதிருந்தாலன்றி கடன் பெறுவதற்கு எவ்வுறுப்பினரும் உரித்துடையவராகார். தனது அல்லது தனது மனைவியின் பெயரிலோ அல்லது கூட்டாகவோ 20,000 ரூபாவிற்கு மேற்பட்ட பெறுமதியைக் கொண்ட வதிவிடத்தைச் சொந்தமாகக் கொண்ட எவ்வுறுப்பினருக்கும் வதிவிடத்திற்கு மேலதிக இணைப்புக்களை மேற்கொள்ளல் அத்துடன்/அல்லது திருத்தங்களைத் தவிர்ந்த வேறேதேனும் நோக்கத்திற்கும் கடன்கள் வழங்கப்படமாட்டாது.

*திருப்பிக் கொடுப்பனவுகள்.*

76. (1) உறுப்பினர்கள் இளைப்பாற்றுக் காலத்தை அடையுங்கால் முழுக் கடனையும் திருப்பிச் செலுத்துவதை உறுதிப்படுத்தும் வரையில் முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் விடயத்தில் அவர்கள் ஐம்பத்தைந்து வயதை அடைவதற்கு எடுக்கவேண்டிய ஆண்டுகளின் எண்ணிக்கையைக் கருத்திற்கொண்டு கடன் திருப்பிக் கொடுப்பதற்கு அனுமதிக்கப்படவுள்ள தவணைக் கட்டண எண்ணிக்கை பின்வருமாறு நிர்ணயிக்கப்பட வேண்டும். :

(i) முப்பத்தைந்து வயது அல்லது அதற்குட்பட்ட உறுப்பினருக்கு இருபது ஆண்டுத் தவணைக்கட்டணங்கள் அனுமதிக்கப்படல் வேண்டும்.

(ii) முப்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவராயும் நாற்பத்தைந்து வயதிற்குட்பட்டவராயுமுள்ள உறுப்பினருக்குப் பதினைந்து ஆண்டுத் தவணைக் கட்டணங்கள் அனுமதிக்கப்படல் வேண்டும்.

(iii) நாற்பது வயதிற்கு மேற்பட்டவராயும் நாற்பத்தைந்து வயதிற்கு உட்பட்டவராயுமுள்ள உறுப்பின்ருக்குப் பத்து ஆண்டுத் தவணைக் கட்டணங்கள் அனுமதிக்கப்படல் வேண்டும்.

(iv) நாற்பத்தைந்து வயதிற்கு மேற்பட்டவராயும் ஐம்பது வயதிற்கு உட்பட்டவராயுமுள்ள உறுப்பினருக்கு ஐந்து ஆண்டுத் தவணைக் கட்டணங்கள் அனுமதிக்கப்படல் வேண்டும்.

(2) உறுப்பினரின் சம்பளத்திலிருந்து மாதாந்தக் கழிவுகள் செய்யப்படும் என்பதுடன் அரசாங்கத்தினால் விதிக்கப்பட்ட கழிவு எல்லைகளுக்கு அவை மேற்பட்டிருத்தலாகாது. வேறு பிற கணக்குகளின் பொருட்டான கழிவுத் தொகைகளின் காரணமாய் திரும்பக் கொடுப்பனவுத் தவணைக்கட்டணங்களை அவற்றிற்கான வட்டியுடன் சம்பளப் பட்டியலிலிருந்தும் அறவிடப்படமுடியாதுபோயின், அவை செலுத்தப்படவேண்டிய திகதிகளில் அல்லது அதற்கு முன்னதாக உறுப்பினரால் சங்கத்திற்கு நேரடியாகச் செலுத்தப்படுதல் வேண்டும். உரிய தேதிகளில் திரும்பக் கொடுப்பனவுக் கட்டணங்களையும் அவற்றின் பேரிலான வட்டியையும் செலுத்துவதை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை உறுப்பினர் எடுத்தல் வேண்டும்.

(3) வீடமைப்பதற்கெனக் கடன் வழங்கப்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், முதலாவது கடன் தவணைக் கட்டணம் வழங்கப்பட்ட நாளிலிருந்து பதினெட்டு மாதங்களுக்குப் பிந்தாமல் திரும்பக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்படல் வேண்டும்.

(4) வதிவிடத்திற்கு மேலதிக இணைப்புக்களைச் செய்தல் அல்லது வதிவிடமொன்றினைக் கொள்வனவு செய்தல் விடயங்களில், கடன் வழங்கப்பட்டு ஆறு மாதங்களின் பின்னர் திரும்பக் கொடுப்பனவு ஆரம்பிக்கப்படுதல் வேண்டும்.

77. வட்டிவீதமானது, சங்கத்தின் வங்கியாளர்களினால் மேலதிகப்பற்றுக்களின் சார்பில் அப்பொழுது அறவிடப்படும் வீதங்களிலும் பார்க்க 2 சதவீதத்தால் கூடியதாகும். வழங்கப்பட்ட மாதத்தினை அடுத்த மாதத்திலிருந்து மாதமொன்றின் ஆரம்பத்தில் நிலுவையாயுள்ள குறைந்துவரும் முதலின் பேரில் இக்கடன்களின் மீதிலான வட்டிகள் மாதாந்தம் செலுத்தப்படல் வேண்டும். வட்டிவீதமும் அவை செலுத்தப்படவேண்டிய திகதிகளும்.

78. இவ்விதிகளின் கீழ் வழங்கப்பட்ட கடன்கள் சம்பந்தமான தவணைக்கட்டணக் கொடுப்பனவுகள் அல்லது அவற்றின் பேரிலான வட்டி, அடுத்தடுத்து ஆறு மாதங்களாகச் செலுத்தப்படாதிருப்பின், வருமதியாகவுள்ள தொகையைச் சட்ட நடவடிக்கைச் செலவுகளுடன் அறவிடுமுகமாகச் சம்பந்தப்பட்ட அடைமான உறுதியின்மீது குழுவினால் வழக்குத் தொடரலாம். கொடுப்பனவுகளைச் செலுத்தத் தவறுதல்.

79. (1) உறுப்பினரது உறுப்புரிமைக் காலம் முடிவடையும் பொழுது இவ்விதிகளின் கீழ் வழங்கப்படும் கடனானது, அவரால் முற்றாகத் திருப்பிச் செலுத்தப்படுதல் வேண்டும். எனினும், இளைப்பாறவேண்டிய காலத்திற்கு முன்னராகவே இளைப்பாறியதன் காரணமாக உறுப்பாண்மை முடிவுறுத்தப்பட்டால் நிலுவையாகவுள்ள தொகையை முகாமைக்குழு விதிக்கக் கூடிய அத்தகைய வேறு நிபந்தனைகளுக்கும் அவற்றுக்கு மேற்பட்டதற்கும் அமைய, தவணைக் கட்டணங்களில் செலுத்துவதற்குத் தனது தற்றுணிபின் பேரில் அனுமதி வழங்கப்படலாம். உறுப்பாண்மை நீங்கும் பொழுது கடன்கள் திருப்பிச் செலுத்தப்படுதல்.

(2) இவ்விதியின் (அ) என்னும் பந்தியில் எவ்வாறு விதிக்கப்பட்டிருப்பினும், தவணைக் கட்டணங்களாகத் திருப்பிச் செலுத்துவதற்கு அனுமதிக்கப்பட்ட கடன் தொகையில் தீர்க்கப்படாதிருக்கும் முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்துமாறு எச்சந்தர்ப்பத்திலாயினும் குழுவினால் கோரப்படலாம்.

80. (1) உறுப்பினரொருவர் மரணமடைந்தால் அவரால் பெறப்பட்ட கடனில் தீர்க்கப்படாதிருக்கும் ஏதேனும் தொகையை அதற்கு உரிய எல்லா வட்டியுடன் முற்றாகச் செலுத்துவதற்கு அவரது நியமத்தர்கள், மரணச்சாதனத்தத்துவகாரர் உரிமைத்தத்துவகாரர்கள் அல்லது சட்டப்படியான பின்னுரிமையாளர்கள் பொறுப்பாதல் வேண்டும். உறுப்பினரொருவர் மரணமடைந்தால் அவரால் நியமத்தர்கள், மரணச்சாதனத்தத்துவகாரர்கள் உரிமைத்தத்துவகாரர்கள் முதலியோரது பொறுப்பு.

(2) நிலுவையாயிருக்கும் தொகையை முகாமைக்குழு விதிக்கும் அத்தகைய வேறு நிபந்தனைகள் மீதும் அவற்றுக்கு மேற்பட்டவற்றின் மீதும் செலுத்துவதற்குத் தனது பூரண தற்றுணிபு அதிகாரத்தின்பேரில் மரணமடைந்த உறுப்பினரின் மரணச்சாதனத்தத்துவகாரர்கள், உரிமைத்தத்துவகாரர்கள் அல்லது சட்டப்படியான பின்னுரிமையாளர்களுக்கு குழு அனுமதியளிக்கலாம். ஆயின், எவ்வாறாயினும், திருப்பிக் கொடுப்பனவுத் தவணைக் கட்டணங்களிற் செலுத்துவதற்கு அனுமதிக்கப்படுவதென்னும் தீர்மானம், அத்தகைய மரணச் சாதனத்தத்துவகாரர்கள், உரிமைத் தத்துவகாரர்கள், அல்லது சட்டப்படியான பின்னுரிமையாளர்களுக்கு அறிவிக்கப்படுகையில், அத்தகைய தீர்மானம் எவ்வாறிருப்பினும் மூன்றுமாத கால அறிவித்தலின் பின்னர், கடன்மீது நிலுவையாயிருக்கும் முழுத்தொகையையும் செலுத்துமாறு கோருவதற்கு முகாமைக்குழுவிற்கு தத்துவமுண்டென்பதையும் அறிவிக்கவேண்டும்.

81. இவ்வத்தியாயத்தின் கீழ் முகாமைக்குழுவினால் முதலீடு செய்யக்கூடிய தொகையானது முகாமைக்குழுவின் தற்றுணிபு அதிகாரத்தின்பேரில் கட்டுப்படுத்தப்படும். எவ்வரையறைக்கமைய கடன் வழங்கப்படலாம்.

82. பிணையாக அளிக்கப்பட்ட காணிச் சொத்துக்களுக்குப் பெறுமதியிடுவதன் பொருட்டு, உயர்தொழில் புரியும் கணிப்பாளர் ஒருவரும், குழுவால் நியமிக்கப்பட்ட இன்னொருவருமாய், இரு கணிப்பாளர்கள் குழுவால் நியமிக்கப்படுவார்கள். அவர்களது கணிப்பீடு உறுதிப்படுத்தப்பட்டோ அல்லது சான்றுபகரப்பட்டோ இருத்தல் வேண்டும். கணிப்பாளர்களின் நியமனம்.

83. (1) உயர் தொழிலினுள்ள கணிப்பாளர் ஒருவருக்கு, விண்ணப்பித்த கடன்தொகையின் முதல் 2,000 ரூபாவின் மீது ½ சதவீதத்திலும், மிகுதித் தொகைமீது ¼ சதவீதத்திலும் கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன், அவரால் செய்யப்படும் பிரயாணச் செலவு அவருக்கு மீளவளிக்கப்படும். கணிப்பாளர்களுக்குச்செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள்.

(2) மற்றொரு கணிப்பாளராக நியமிக்கப்பட்ட முகாமைக் குழுவின் உறுப்பினருக்கு அவரது பிரயாணச் செலவுகளும் மீளளிக்கப்படுவதுடன் உணவுப்படியும் வழங்கப்படும்.

84. அடைமானமாக வைக்கப்பட்ட காணிச்சொத்தின் அப்போதைய நிலையையும் பெறுமதியையும் கருத்திற்கொண்டு பல முறிகளும் ஈராண்டிற்கொருமுறை குழுவினால் மீளாய்வு செய்யப்படும்; அத்துடன் அவசியமெனக் கருதப்படுமானால், அடைமானமாக வைக்கப்பட்ட காணிச் சொத்தின் நிலையையும் பெறுமதியையும் பரிசோதனை செய்து அறிக்கையிடுமாறு தனது உறுப்பினர்களுள் ஒருவரை அல்லது ஒன்றிற்கு மேற்பட்டோரைக் குழு அனுப்பலாம்; அத்தகைய பரிசோதனையின்பொருட்டுச் செலவேதும் ஏற்படின் அது தொழிற்பாட்டுச் செலவுகளில் ஒரு பகுதியாக அமைந்து சங்கத்தின் நிதிகளிலிருந்து செலுத்தப்படும். ஈராண்டிற்கொருமுறை முறிகள் மீளாய்வுப்படுதலும், அடைமானமாக வைக்கப்பட்ட காணிச்சொத்துக்கள் பார்வையிடப்படலும்.

85. இவ்வத்தியாயத்தின் விதிகளின் கீழ் கடன் வழங்குதல் குழுவினால் அங்கீகரிக்கப்பட்டவுடன், உறுப்பினர் தமது சொந்தச் செலவில் அத்தகைய காணியைச் சங்கத்திற்கு அடைமானமாக அளிப்பதுடன் சங்கத்தின் பெயரில் அடைமான முறியை நிறைவேற்றவேண்டும். **அடைமானம் முதல் அடைமானமாயிருத்தல் வேண்டும்.** அறுதியுறுதியும் அடைமான முறியும் முறையாக நிறைவேற்றப்பட்டு காணிப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டாலன்றி கடன்வழியாக வழங்கப்பட்ட மாத்தத் தொகைக்கான அனுப்பீடு விண்ணப்பதாரருக்கு அனுப்பிவைக்கப்படமாட்டாது. அடைமான முறி நிறைவேற்றப்பட்டபின் கடன் தொகை வழங்கப்படல்.

அடைமானம் வைத்தவரால் காணி விற்கப்படுதற்கு அல்லது கைமாற்றஞ் செய்யப்படுவதற்கு முன்னர் கடன் தொகை முற்றுகச்செலுத்தப் படுதல்.

86. அடைமானம் வைத்தவரால் கடன்தொகை, அதற்குரிய வட்டி, மற்றும் செலவுட்பட்ட சங்கத்திற்கு முற்றுகச் செலுத்தப்படும்வரை, முற்போந்த விதியின் கீழ் சங்கத்திற்கு அடைமானமாக் அளிக்கப்பட்ட காணிச்சொத்து பிறிதொருவருக்கு கைமாற்றப் படவோ, சாட்டப்படவோ, விற்கப்படவோ ஆகாது.

ஒதுக்க நிதி.

87. இழப்புக்களைப் பதிலீடு செய்யும் நோக்கத்திற்காக வட்டியாக அறவிடப்பட்ட தொகையின் அரைச்சத வீதத்திற்குக் குறையாத தொகை ஒதுக்க நிதிக்கு மாற்றஞ் செய்யப்படல் வேண்டும் ; ஆனால் ஒதுக்க நிதியின் வரவிலுள்ள தொகையானது கடன்களின்மீது நிலுவையாகவுள்ள தொகையின் பத்திலொரு பங்கை விஞ்சும் பொழுது பொதுக்கூட்ட அங்கீகாரத்துடன் முகாமைக்குழு, அத்தகைய விஞ்சிய தொகையின் எப்பகுதியையாவது இலாபநட்டக் கணக்கிற்கு மாற்றஞ் செய்யலாம்.

6-18—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

## இணக்கச் சபைகள் சட்டம்

கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்ந்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1972 செற்றெம்பர் மாதம் 8 ஆம் தேதிய 24 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 20 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள நாரந்தனைக் கிராமப்பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

1. ஊர்காவற்றுறை, கரம்பன், 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பையா கதிரித்தம்பி அவர்கள்.
2. வேலணை, சரவணை, 1 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இராமலிங்கம் நகுலேசபிள்ளை அவர்கள்.
3. வேலணை, சரவணை, 2 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த குமாரவேலு பத்மநாதன் அவர்கள்.
4. ஊர்காவற்றுறை, புளியங்கூடல் 3 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சின்னையா குருசாமி அவர்கள்.
5. ஊர்காவற்றுறை, புளியங்கூடல் 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பையா கந்தையா அவர்கள்.
6. ஊர்காவற்றுறை, நாரந்தனை 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கதிரவேலு தியாகராசா அவர்கள்.
7. ஊர்காவற்றுறை, நாரந்தனை 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுந்தரம்பிள்ளை இராமலிங்கம் அவர்கள்.
8. ஊர்காவற்றுறை, நாரந்தனை 6 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகலிங்கம் நடராசா அவர்கள்.
9. ஊர்காவற்றுறை, நாரந்தனை 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சவரிமுத்து சுசைதாசன் அவர்கள்.
10. ஊர்காவற்றுறை, நாரந்தனை 8 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சந்தியாப்பிள்ளை பிரான்சிஸ் அவர்கள்.
11. ஊர்வாவற்றுறை, நாரந்தனை 9 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள்.
12. ஊர்வாவற்றுறை, நாரந்தனை 9 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா சிவசுப்பிரமணியம் அவர்கள்.
13. ஊர்காவற்றுறை, கரம்பன் 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கந்தையா முத்துக்குமாரு அவர்கள்.
14. ஊர்காவற்றுறை, கரம்பன் 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகலுதர் இரத்தினசபாபதி அவர்கள்.
15. ஊர்காவற்றுறை, கரம்பன் 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த இளையதம்பி ஞானப்பிரகாசம் அவர்கள்.
16. ஊர்காவற்றுறை, கரம்பன் 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நிக்கிலாப்பிள்ளை யுவக்கின்பிள்ளை அவர்கள்.
17. ஊர்காவற்றுறை, கரம்பன் 11 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகனுதி கனகசபை அவர்கள்.
18. ஊர்காவற்றுறை, கரம்பன் 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த கோயிலாம்பிள்ளை ஆனந்தவேல் அவர்கள்.
19. ஊர்காவற்றுறை, கரம்பன் 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை நாகராசா அவர்கள்.
20. ஊர்காவற்றுறை, கரம்பன் 13 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நாகராசா சிவானந்தசோதி அவர்கள்.

(ஆ) ஊர்காவற்றுறை, கரம்பன் 10 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சுப்பையா கதிரித்தம்பி அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன்

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டுமெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க.
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 23 ந உ.

6-150—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

கொழும்பு நிர்வாக மாவட்ட உதவிவிலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) யால் வெளியிடப்பட்டதும் 1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17 ம் திகதி வெளியான 47/1 ம் இலக்க, ஸ்ரீ லங்கா குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான, எவ்சீ/ஜெவீ/-1 (50) ம் இலக்க (பாண்) விலைக்கட்டளையையும், எவ்சீ/ஜெவீ/எஸ்எவ்/ 12 (8) ம் இலக்க (கோதுமை மா) விலைக்கட்டளையையும் 1973 ம் ஆண்டுமே மாதம் 11 ந் திகதியில், விலைக்கட்டுப்பாட்டுச் சட்டத்தின் (அதிகாரம் 173) 4 (7) ம் பிரிவின் கீழ் வெளிநாட்டு, உள்நாட்டு, வர்த்தக அமைச்சர் அவர்கள் அங்கீகரித்துள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஜயந்தா கெலேகம,
செயலாளர்,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 11 ந உ.

6-157—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

## விலைக்கட்டுப்பாட்டுச் சட்டம்

மன்னர் நிர்வாக மாவட்ட உதவிவிலைக்கட்டுப்பாட்டதிகாரி (உணவு) யால் வெளியிடப்பட்டதும் 1973 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 15 ம் திகதி வெளியான 47 ம் இலக்க இலங்கை குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதுமான எம்என்/1973/3 ம் இலக்க விலைக்கட்டளையை (பாண்) விலைக்கட்டுப்பாட்டுச்சட்டம் (அதிகாரம் 173) பிரிவு 4 (7) ன் கீழ் தமக்களிக்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு 1973 ம் ஆண்டு மே மாதம் 12ந் திகதியில், வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சர் அவர்கள் அங்கீகரித்துள்ளார் என இத்தால் அறிவிக்கப்படுகிறது.

ஜயந்தா கெலேகம,
செயலாளர்,
வெளிநாட்டு, உள்நாட்டு வர்த்தக அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 14 ந உ.

6-158—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

**சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்**

35 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 35 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர், பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகியயான், சங்கைக்குரிய பண்டித கேன்பிட்டகெதற பியனந்த தேரோ அவர்களையும், திருவாளர்கள் டீ. எப். அத்துக்கோரள அவர்கள், டீ. சீ. வீரவர்த்தன அவர்கள், ஆர். எம். சிறிவர்த்தன அவர்கள் ஆகியோரையும் 1973 மே 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் ஓராண்டு காலத்திற்குக் வத்துப்பிட்டிவலை பாலிய குற்றவாளிகள் பயிற்சிப் பள்ளிக்கூடத்திற்கான உள்ளூர் பார்வையிடற்குழுவின் உறுப்பினர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12.
1973 ம் ௵ மே ௴ 18 ந உ.

6–39/1—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

**சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்**

35 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டத்தின் 35 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர், பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய யான் திருவாளர்கள் ஏ. எஸ். குணத்திலக்க அவர்கள், டீ. பீ. ஜே. கோதாகொட அவர்கள், அசோக யட்டவர அவர்கள், எச். டீ. பீ. பர்நாந்து அவர்கள் ஆகியோரை 1973 மே 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் ஓராண்டு காலத்திற்குப் போகம்பரை சிறைச்சாலைக்கும், கண்டி விளக்கமறியற் சிறைச்சாலைக்குமான உள்ளூர் பார்வையிடற் குழுவின் உறுப்பினர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12.
1973 ம் ௵ மே ௴ 18 ந உ.

6–39/2—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

**சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்**

35 (1) ஆம் பிரிவின கீழான அறிவித்தல்

(54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 35 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர், பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய யான் திருவாளர்கள் எம். ஏ. சிறிசேன அவர்கள், பீ. பீ. திசாநாயக்க அவர்கள், எச். பீ. தென்னக்கோன் அவர்கள், எஸ். கே. அர்னோலிஸ் அவர்கள் ஆகியோரை 1973 மே 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் ஓராண்டு காலத்திற்கு அனுராதபுரச் சிறைச்சாலைக்கும், திறந்தவெளிச் சிறைச்சாலைக்குமான உள்ளூர் பார்வையிடற் குழுவின் உறுப்பினர்களாக இத்தால் நியமிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12.
1973 ம் ௵ மே ௴ 18 ந உ.

6–39/3—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

**சிறைச்சாலைகள் கட்டளைச் சட்டம்**

35 (1) ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

(54 ஆம் அத்தியாயமான) சிறைச்சாலைகள் கட்டளைச்சட்டத்தின் 35 (1) ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு நீதி அமைச்சர், பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய யான் திருவாளர்கள் முகம்மது அஷ்றப் காதர் அவர்கள், முறபொலவத்தை குணதாச அவர்கள், உடுவரகே தோமஸ் குணவர்த்தன அவர்கள், கே. பீ. ஜயசேகர அவர்கள் ஆகியோரை 1973 மே 1 ஆந் தேதியிலிருந்து தொடங்கும் ஓராண்டு காலத்திற்குக் குண்டசாலைத் திறந்தவெளிச் சிறைச்சாலைக்கான உள்ளூர் பார்வையிடற் குழுவின் உறுப்பினர்களாக் இத்தால் நியமிக்கின்றேன்.

பீலிக்ஸ் ஆர். டீ. பண்டாரநாயக்க,
நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு 12.
1973 ம் ௵ மே ௴ 18 ந உ.

6–39/4—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

**1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டம்**

1970 ம் ஆண்டு யூலை மாதம் 10 ந் திகதியின் 14,914 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையிற் பிரசுரிக்கப்பட்டபடி, 1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின்கீழ், போக்குவரத்து அமைச்சர் அவர்கள், பின்வரும் கனவான்களை இலங்கைப் போக்குவரத்துச் சபையின் உறுப்பினர்களாக,அவர்களின் பெயர்களுக்கெதிரே குறிப்பிட்ட தேதிகள் தொடக்கம் அவர்களின் பெயர்களுக்கெதிரே குறிப்பிட்ட காலங்கள் வரை, மீண்டும் நியமனஞ் செய்வதில் மகிழ்ச்சியடைகின்றார் என இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| திரு. அனில் முனசிங்க | .. | 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 2 ஆம் தேதி தொடக்கம் 3 ஆண்டுகள் |
| திரு. பர்சி எகலியகொட | .. | 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் தேதி தொடக்கம் 3 ஆண்டுகள் |
| திரு. ஜித்தாந்திர வீரமன் | .. | 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் தேதி தொடக்கம் 3 ஆண்டுகள் |
| திரு. டி. ஜே. ஆர். திசநாயக்க | .. | 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் தேதி தொடக்கம் 3 ஆண்டுகள் |
| திரு. கே. டபிள்யு. சொய்சா | .. | 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் தேதி தொடக்கம் 3 ஆண்டுகள் |
| திரு. எம். எல். எம். ஜன்வ | .. | 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 16 ஆந் தேதி தொடக்கம் 3 ஆண்டுகள் |

1957 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மோட்டார் போக்குவரத்துச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 7 ஆம், 8 ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய மேற்கூறிய நியமங்கள் அமையும்.

மேற்கூறிய சட்டத்தின் 2 ஆம் பிரிவின் 7 ஆம், 8 ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைய, 2 ஆம் பிரிவின் 1 ஆம் உட்பிரிவின்படி திரு. அனில் முனசிங்க அவர்களை 1973 ஆம் ஆண்டு யூன் மாதம் 2 ஆம் தேதி தொடக்கம் 3 ஆண்டு காலத்துக்கு இலங்கைப் போக்குவரத்துச் சபையின் தலைவராக மீண்டும் நியமிப்பதில் போக்குவரத்து அமைச்சர் மகிழ்ச்சியடைகிறார் என மேலும் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

கே. சீ. எப். விஜயவிக்ரம,
செயலாளர்—போக்குவரத்து அமைச்சு.

கொழும்பு.
1973 ம் ௵ மே ௴ 15 ந உ.

6–34—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

கட்டளை இல. 15

**மகாவலி அபிவிருத்திச் சபையின் 1970 ம் ஆண்டின் 14 ம் இலக்க அதிகாரச் சட்டம்**

பகுதி 27 ன் கீழுள்ள கட்டளைச் சட்டம்

நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர் மைத்திரிபால சேனநாயக்க ஆகிய நான் மகாவலி அபிவிருத்திச் சபையின் 1970 ம் ஆண்டின் 14 ம் இலக்க அதிகாரச் சட்டத்தின் பகுதி 27 ன் கீழ் எனக்கு உரிமையளிக்கப்பட்ட அதிகாராணைப்படி இதிற்காணும் பட்டோலையின் குறிக்கப்பட்டுள்ள மகாவலி அபிவிருத்திச் சபைக்குத் தேவைப்படும் காணியைக் கொள்வனவு செய்வதற்கு இக்கட்டளைப் பிரகாரம் அங்கீகரிக்கிறேன்.

மைத்திரிபால சேனநாயக்க,
நீர்ப்பாசன, மின்சக்தி, பெருந்தெருக்கள் அமைச்சர்.

தொடர் இல. அமைச்சு : டபிள்யூ/எம்டி/எல்ஏ/3/73
தொடர் இல : ம.அ.ச : இ.என்.ஜீ/பீ.ஒஎல்/98
கொழும்பு.
1973 ம் ஆண்டு வைகாசி மீ 11 ந உ.

**பட்டோலை**

இலங்கைக் குடியரசின் மத்திய மாகாணத்திலுள்ள மாத்தளை மாவட்டத்தில் றத்தோட்டை காரியாதிகாரியின் பகுதியில் உள்ள (இல. 360) மறுக்கோன் கிராம சேவையாளரின் கீழ், கீழே தரப்பட்ட எல்லைக்குள் அடங்கிய மறுக்கோன் கிராமத்தில் உள்ளதான, நான்கு துண்டு காணியின் பகுதியான 0ஏ., 1றூ., 24பே. காணி நிலம்.

1 ம் துண்டு : உல்பொத்தகும்புற—காணியின் பகுதி 0ஏ., 0றூ., 8பே.
வடக்கு : துன்ஓயா ;
தெற்கு—கிழக்கு அதே காணியின் பகுதி ;
மேற்கு : நீரோடை.

2 ம் துண்டு : வெலகெடற கும்புற—காணியின் பகுதி 0ஏ., 0றூ., 38பே.
வடக்கு : துன்ஓயா ;
கிழக்கு : நீரோடை ;
தெற்கு—மேற்கு : அதே காணியின் பகுதி.

3 ம் துண்டு : வெலகெடற கும்புற—காணியின் பகுதி 0ஏ., 0றூ.,13பே.
வடக்கு : நீரோடை ;
கிழக்கு : துன்ஓயா ;
தெற்கு : 2 ம் துண்டு ;
மேற்கு : அதே காணியின் பகுதி.

4 ம் துண்டு : ஈறியககொட்டுவ—காணியின் பகுதி 0ஏ., 0றூ., 5பே.
வடக்கு—கிழக்கு : அதே காணியின் பகுதி ;
தெற்கு : நீரோடை ;
மேற்கு : அதே காணியின் பகுதி.

உரிமை கோருபவர் : லெபிதம்பி, எம். எச். முகாந்திரம், டபிள்யு. வி. சடாதிச, டபிள்யூ. வீ. விமலதிச, டபிள்யூ. வீ. பிறேமசீலி, டபிள்யு. வீ. தயாசீலி, எம். பி. முகாந்திரம் ஆகியோர்.

6–40—01.06.73 ந திகதிய வர்த்தமானி இல. 62

---

எல்.டி.—பீ. 2/72

எச்.ஈ.பீ/1/19/3

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக் கழகச் சட்டம்**

72 ஆம் பிரிவின் கீழான கட்டளை

1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இலங்கைப் பல்கலைக் கழகச் சட்டத்தின் 72 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக்கொண்டு, கல்வி அமைச்சர் பதியுத்தீன் மஹ்மூத் ஆகிய நான், 1973 ஆம் ஆண்டு யூலை மாதம் 1 ஆம் நாளை மேற்கூறப்பட்ட 72 ஆம் பிரிவு நடைமுறைக்கு வரவேண்டிய திகதியாக இக்கட்டளை மூலம் நியமிக்கிறேன்.

பதியுத்தீன் மஹ்மூத்,
கல்வி அமைச்சர்.

கொழும்பு.
1973 ம் ஆண்டு மே மீ 19 ந உ.

6–19—01.06.73 ந திகதிய வர்த்தமானி இல. 62

---

**இணக்கச் சபைகள் சட்டம்**

கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1970 ஆகத்து மாதம் 7 ஆம் தேதிய 14,918 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற்கான அட்டவணையில் 18 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட மாத்தறை மாவட்டத்திலுள்ள பெரலப்பனுதரைக்கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன்.

1. ஊறுப்பொக்கை, தம்பஹலை, "சிங்கசெவன" ஐச்சேர்ந்த தர்மதாச விக்கிரமசிங்க அவர்கள்.
2. கிரிலிப்பனே, மொரகலையைச் சேர்ந்த டீ. ஜே. சமரதுங்க அவர்கள்.
3. பெரலப்பனுதரை, தலபெலகந்தை, போதிருக்காராம வாசியாகிய சங்கைக்குரிய கெட்டவல தம்மாவாச தேரோ அவர்கள்.
4. கிரிலிப்பனே, மொரகலை, மொலொக்கமுவையைச் சேர்ந்த கெட்டி ஆரச்சிகே கொர்னேலிஸ் தர்மசேன அவர்கள்.
5. பெங்கமுவை, மொலொக்கமுவையைச் சேர்ந்த கெட்டியாரச்சிகே பேமதாச அவர்கள்.
6. ஊறுப்பொக்கை, கின்னலியை, கட்டுகாவத்தையைச் சேர்ந்த அதாவுதகே பிரேமரத்தின அவர்கள்.
7. பெரலப்பனுதரை, கெட்டவலகமை, உ. தெ. கா. ஐச்சேர்ந்த தம்மிக பேமசிறி சேபால தகநாயகக அவர்கள்.
8. ஊறுப்பொக்கை, பெலபொல்வத்தையைச் சேர்ந்த செ. சா. கு. பிரெஞ்சிஸ் அவர்கள்.
9. ஊறுப்பொக்கை, "கங்காஸ்ரீ" ஐச் சேர்ந்த சிமன்மேரு பதிரனகே தொன் கொர்னேலிஸ் அவர்கள்.
10. ஊறுப்பொக்கை, கின்னலியையைச் சேர்ந்த தந்திரிகமகே சாதிரிஸ் அப்புகாமி அவர்கள்.
11. ஊறுப்பொக்கை, அழுத்வத்தையைச் சேர்ந்த விஜேசுந்தர திசாநாயக்க நிலமே அவர்கள்.
12. ஊறுப்பொக்கை, கொடேதெனியையைச் சேர்ந்த சூரியபண்டார விமலரத்தின அவர்கள்.
13. ஊறுப்பொக்கையைச் சேர்ந்த விதான கமகே பிந்தேரிஸ் அவர்கள்.
14. ஊறுப்பொக்கையைச் சேர்ந்த மெண்டிஸ் லொகு போக ஹவத்த அவர்கள்.
15. ஊறுப்பொக்கை, கின்னலியையைச் சேர்ந்த கமவெதிகே பேதிரிஸ் அப்புகாமி அவர்கள்.
16. பெரலப்பனுதரை, கெகுன்தெனியையைச் சேர்ந்த ஏகநாயககே செம்சன் அவர்கள்.
17. பெரலப்பனுதரை, உடுகுப்பிட்டியைச் சேர்ந்த டீ. எல். ராஜபக்ச பதிரண அவர்கள்.
18. கிரிலிப்பனே, மொறகலையைச் சேர்ந்த கடவத்த கமகே சுவாரிஸ் விஜேவிக்கிரம அவர்கள்.
19. கிரிலிப்பனே, மொறகலையைச் சேர்ந்த பனுகடுவ கமகே குணபால அவர்கள்.

20. ஊறுப்பொக்கை, தம்பஹூல, அழுத்தெனியைச் சேர்ந்த ருபசிங்க சியதோரிஸ் அப்புகாமி அவர்கள்.

21. பெரலப்பனுதரை, ஆரச்சிகெதரையைச் சேர்ந்த யசபால கமகே அவர்கள்.

22. பெரலப்பனுதரை, விஜயகமை, மொதரகேனையைச் சேர்ந்த வடுமுல்லே கம்மாச்சாரிகே சார்லிஸ்காமி அவர்கள்.

23. பெரலப்பனுதரை, விஜயகமை, எக்கொடகவத்தையைச் சேர்ந்த மஹப்பு படல்கே சிரிகோரிஸ்காமி அவர்கள்.

24. பெரலப்பனுதரை, அபகொலகேன, " சமரசெவன " ஐச் சேர்ந்த சாள்ஸ் சமரவிதாரண அவர்கள்.

25. பெரலப்பனுதரை, " வீரகிரி " ஐச் சேர்ந்த வீரமன் நந்தசேன அவர்கள்.

26. பெரலப்பனுதரையைச் சேர்ந்த சய்நேரிஸ் விக்கிரமகே அவர்கள்

27. பெரலப்பனுதரை, இலுக்பிட்டியைச் சேர்ந்த கெட்டியாரச்சிகே சியதோரிஸ் அவர்கள்.

28. ஊறுப்பொக்கை, கிரிப்பிட்டியைச் சேர்ந்த எட்வின் தகநாயக்க அவர்கள்.

29. ஊறுப்பொக்கை, இமேகேன, கிரிப்பிட்டியைச் சேர்ந்த ஏ. ஜீ. விஜேவிக்கிரம அவர்கள்.

30. ஊறுப்பொக்கை, தம்பஹூல, அம்பகாவத்தையைச் சேர்ந்த அழுத்கே அந்திரயஸ் அவர்கள்.

31. தெனியாபை, பட்டாந்துறையைச் சேர்ந்த எஸ். எல். ரத்நாயக்க அவர்கள்.

32. ஊறுப்பொக்கை, உளம்பத்தகடையைச் சேர்ந்த யக்கஹ விட்டகே ஜேமிஸ் அப்புகாமி அவர்கள்.

33. ஊறுப்பொக்கை, கிகொடையைச் சேர்ந்த கே. ஜானியா அவர்கள்.

(ஆ) ஊறுப்பொக்கை, தம்பஹூல, " சிங்கசெவன " ஐச் சேர்ந்த தர்மதாச விக்கிரமசிங்க அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன் ;

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டு மெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 23 ந உ.

6–151/1—01.06.73 ந திகதிய வர்த்தமானி இல. 62

---

## இணக்கச் சபைகள் சட்டம்

கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்த லுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினால் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினால் எனக்குரித்தாக்கப் பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான், இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1972 செற்றெம்பர் மாதம் 8 ஆம் தேதிய 24 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற் கான அட்டவணையில் 7 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட மாத்தளை மாவட்டத்திலுள்ள இனமழுவைக் கோரளைக் கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன்.

1. கிம்பிசையைச் சேர்ந்த அழுத்கெதர டிங்கிரிபண்டா அவர்கள்.

2. கிம்பிசை, இனமழுவையைச் சேர்ந்த எச். பீ. சில்டன் சில்வா அவர்கள்.

3. சிம்பிசை, இனமழுவையைச் சேர்ந்த பீ. ராஜபக்ச அவர்கள்.

4. கிம்பிசை, றெட்டவெவையைச் சேர்ந்த பீ. கிரிபண்டா அவர்கள்.

5. கிம்பிசையைச் சேர்ந்த ஏ. எம். டீ. பண்டா அவர்கள்.

6. சீகிரியை, காசன்வளையைச் சேர்ந்த கமகேதர பண்டிரால அவர்கள்.

7. சீகிரியையைச் சேர்ந்த மானனே கேவகே றெசலின் குணசேகர அவர்கள்.

8. சீகிரியை, பொல்லத்தாவையைச் சேர்ந்த கோரத் முதியன்சேலாகே ரிகிரிபண்டா அவர்கள்.

9. சீகிரியை, பொல்லத்தாவையைச் சேர்ந்த அழுத்கெதர ரம்பண்டா அவர்கள்.

10. சீகிரியை, பிதுரங்கலையைச் சேர்ந்த கமகெதர கோரத்காமி அவர்கள்.

11. சீகிரியை, பிதுரங்கலையைச் சேர்ந்த வியன கெதர கிரால அவர்கள்.

12. சீகிரியை, அவுடங்காவையைச் சேர்ந்த கமகெதர முதுபண்டா அவர்கள்.

13. சீகிரியை, அவுடங்காவையைச் சேர்ந்த தென்னக்கோன் முதியன்சேலாகே கவுரால அவர்கள்.

14. கெடிகஸ்வலானையைச் சேர்ந்த கோரத் முதியன்சேலாகே ரிகிரிபண்டா அவர்கள்.

15. கெடிகஸ்வலானையைச் சேர்ந்த கோரத் முதியன்சேலாகே சேனநாயக்க அவர்கள்.

16. திகம்பதகையைச் சேர்ந்த கமகெதர வீரக்கோன் அவர்கள்.

17. திகம்பதகையைச் சேர்ந்த தலகஹ கெதர கிங்பண்டா அவர்கள்.

18. கிம்பிசை, நாகலவெவையைச் சேர்ந்த மில்லகஹ கெதர ரிகிரியா அவர்கள்.

19. சீகிரியை, தல்கொட்டைச் சேர்ந்த கமகெதர ரம்பண்டா அவர்கள்.

20. சீகிரியை, தல்கொட்டைச் சேர்ந்த பெத்தெகெதரடிங்கிரிபண்டா அவர்கள்.

21. இந்திகஸ்வெவையைச் சேர்ந்த ரிகிரிபண்டா குலதுங்க அவர்கள்.

22. உடவெலயாகமையைச் சேர்ந்த வத்தேகெதர புஞ்சிகிரா அவர்கள்.

23. சீகிரியை, தியகெபில்லேயைச் சேர்ந்த அழுத்கெதர வன்னிகாமி அவர்கள்.

(ஆ) கிம்பிசையைச் சேர்ந்த அழுத்கெதர டிங்கிரிபண்டா அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக்கின்றேன் ;

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டு மெனவும் நிச்சயிக்கின்றேன்.

இரத்தினசிறி விக்கிரநாயக,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 23 ந உ.

6–151/2—01.06.73 ந திகதிய வர்த்தமானி இல. 62

**இணக்கச் சபைகள் சட்டம்**

கட்டளை

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசியலமைப்பின் 95 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்டு 1972 யூன் மாதம் 12 ஆம் தேதிய 11/2 ஆம் இலக்க அதிவிசேட கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்த லுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1963 இன் 12 ஆம் இலக்கச் சட்டத்தினுல் திருத்தப்பட்டவாறுள்ள 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (1), 3 (8), 4 (1) என்னும் பிரிவுகளினுல் எனக்குரித் தாக்கப்பட்டுள்ள தத்துவங்களைக் கொண்டு பிரதி நீதி அமைச்சர், ரத்தினசிறி விக்கிரமநாயக்க ஆகிய யான் இதன் மூலம்—

(அ) 1958 இன் 10 ஆம் இலக்க இணக்கச் சபைகள் சட்டத்தின் 3 (2) ஆம் பிரிவின் கீழ் 1972 செற்றெம்பர் மாதம் 8 ஆம் தேதிய 24 ஆம் இலக்கக் கசெற்றில் வெளியிடப்பட்ட அறிவித்தற் கான அட்டவணையில் 10 ஆம் இலக்கத்தில் விபரிக்கப்பட்ட கண்டி மாவட்டத்திலுள்ள கம்பகா மேற்கு (உ.து.) கிராமப் பகுதிக்கென அமைக்கப்பட்ட இணக்குவோர் குழாத்துக்குப் பின்வரும் ஆட்களை உறுப்பினராக நியமிக்கின்றேன் :—

1. மாடுகொடை, மெதிவக்கையைச் சேர்ந்த அபேகோன் அபேசிங்க முதியஞ்சேலாகே மெதிவக்க வளவ்வே ரிகிரிபண்டா மெதிவக்க அவர்கள்.
2. உன்னஸ்கிரியை, பம்பரபெத்தையைச் சேர்ந்த உடகெதர உக்குவா அவர்கள்.
3. மாடுகொடை, பள்ளேவெலே, மெதிவக்கையைச் சேர்ந்த லுனுதுரு கெதர குரதலா அவர்கள்.
4. மாடுகொடை, மாளிகாவளவ்வைச் சேர்ந்த வட்டகெட்டியே வளவ்வே புஞ்சிபண்டா அவர்கள்.
5. உன்னஸ்கிரியை, கெவுல்கமுவையைச் சேர்ந்த கருணுதிபதி கலோகஹ கெதர டிங்கித்தா வைத்தியர் அவர்கள்.
6. மாடுகொடை, மெதிவக்கை, மெதிவக்கை வளவ்வைச் சேர்ந்த சந்திரபாலபண்டா அதிகாரி எக்கொடவெல அவர்கள்.
7. உன்னஸ்கிரியை, பம்பரபெத்தையைச் சேர்ந்த பள்ளேகெதர அப்புகாமி அவர்கள்.
8. உன்னஸ்கிரியை, பிற்றகொடையைச் சேர்ந்த சமரக்கோன் முதியஞ்சேலாகே தெமளக்கோட்டேகெதர பிங்காமி அவர்கள்.
9. உன்னஸ்கிரியை, கெவுல்கமையைச் சேர்ந்த அபேசிங்க முதியஞ் சேலாகே அபொன் கெதர கிரிபண்டா அவர்கள்.
10. உன்னஸ்கிரியை, நுகேதென்னே, பஞ்சலவத்தையைச் சேர்ந்த அபேசிங்க முதியஞ்சேலாகே கெதர ரிகிரி பண்டா அவர்கள்.
11. மாடுகொடை, ஹால்யாலேயைச் சேர்ந்த அபேசிங்க முதியஞ் சேலாகே மத்துமபண்டா அவர்கள்.
12. மாடுகொடை, ஹால்யாலேயைச் சேர்ந்த உடவளவ்வே அபேரத் தின பண்டா அவர்கள்.
13. மாடுகொடை, மெதிவக்கையைச் சேர்ந்த யமனல கெதர ரிகிரா அவர்கள்.
14. மாடுகொடையைச் சேர்ந்த பயிந்தகல வளவ்வே ரிகிரிபண்டா அவர்கள்.
15. மாடுகொடை, ஹால்யாலேயைச் சேர்ந்த தசநாயக்க முதியஞ் சேலாகே கீன்பண்டா அவர்கள்.
16. மாடுகொடை, மெதிரியைச் சேர்ந்த ஜனுதிபதிகே வித்தியாரத் தின அவர்கள்.
17. மாடுகொடை, ஹால்யாலேயைச் சேர்ந்த வாசலமுதியஞ் சேலாகே நிந்தர கும்புரேகெதா அபேசிங்க பண்டா அவர்கள்.
18. போபாணேயைச் சேர்ந்த உடவளவ்வே லொகு பண்டா கொடகும்புர அவர்கள்.
19. மாடுகொடை, மெதிவக்கையைச் சேர்ந்த வீரசேகர வாசல முதியஞ்சேலாகே மெதிவக்க வளவ்வே புஞ்சிபண்டா மெதி வக்க அவர்கள்.

(ஆ) மாடுகொடை, மெதிவக்கையைச் சேர்ந்த அபேகோன் அபேசிங்க முதியஞ்சேலாகே மெதிவக்க வளவ்வே ரிகிரிபண்டா மெதிவக்க அவர்களை மேற்சொன்ன குழாத்தின் தலைவராகவிருக்க நியமிக் கின்றேன் ;

(இ) அத்தகைய ஆட்கள் ஒவ்வொருவரும் மேற்சொன்ன குழாத்துக்கு உறுப்பினராக நியமிக்கப்படும் காலம் இக்கட்டளை கசெற்றில் வெளியிடப்படும் தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளாதல் வேண்டு மெனவும் நிச்சயிக்கின்றேன்.

இ. விக்கிரமநாயக்க,
பிரதி நீதி அமைச்சர்.

நீதி அமைச்சு,
கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 23 ந் உ.

6–151/3—01.06.19 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

எல். டி.—பி 207/41

**கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டம்**

அறிவித்தல்

(சட்டவாக்கங்களின் 136 ம் அத்தியாயமாகிய) கூலி நிருணய சபைகள் கட்டளைச் சட்டத்தின் 6 (1) ம் பிரிவின்கீழ் இதனடியிற் குறிக்கப்பட்ட கட்டளை என்னுல் ஆக்கப்பட்டதென, அக் கட்டளைச் சட்டத்தின் 6 (2) ம் பிரிவின் ஏற்பாடுகளின்படி இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

மேற்கூறிய கட்டளை 1973 ம் ஆண்டு யூன் மாதம் முதலாம் நாளன்று நடைமுறைக்கு வருவதாகும்.

எம். பி. இசட். சிறிவர்தன,
தொழில் அமைச்சர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு மே மீ 23 ந் உ.

**அட்டவணை**

கூலி நிருணய சபைக் கட்டளைச் சட்டத்தின் II ம் பாகத்திலுள்ள ஏற்பாடுகள் பின்வரும் தொழிலுக்குப் பொருந்துவனவாகும் :—

மரத் தொழிலும் தச்சுத் தொழிலும் பின்வரும் தொழிற்பாடுகளுள் ஏதாவது ஒன்றினையோ பலவற்றையோ கொண்டதாயிருக்கும் ; அதாவது,

(i) மரந்தறித்தல், மரங்குற்றியாக்கல், மரமரிதல், மரம் பதனிடுதல்,
(ii) தளபாடங்கள் உற்பத்திசெய்தல்,
(iii) மரப்பெட்டிகள் உற்பத்திசெய்தல்,

இவற்றுடன், பின்வரும் தொழிலாளர்களின் வேலைகளும் சேர்ந்தன வாயிருக்கும் :—

(1) குற்றி அரிவோர் (பொறிமுறை) ,
(2) குற்றி அரிவோர் (கை வாள்) ,
(3) மரம் அரிவோர் (கை வாள்) ;
(4) குற்றியூட்டுவோர் ;
(5) குறுக்குவெட்டுப் பணியாளர் ;
(6) கோடரிப் பணியாளர் ;
(7) குற்றி உருட்டுவோர் ;
(8) குற்றி ஏற்றுவோர் ;
(9) குற்றி நகர்த்துவோர் ;
(10) குற்றி இறக்குவோர் ;
(11) மரம் அடுக்கிவைப்போர் ;
(12) மரம் இறக்குவோர் ;
(13) மரம் ஏற்றுவோர் ;
(14) அரிந்த மரம் அடுக்கிவைப்போர் ;
(15) அரிந்த பலகை அடுக்கிவைப்போர் ;
(16) மரம் அளப்போர் ;
(17) விறகு வகைப்படுத்துவோர் ;
(18) வகைப்படுத்திய மரம் அடுக்கிவைப்போர் ;
(19) பணியாட்குழு மேற்பார்வையாளர் ;
(20) வாட் பரிகாரிகள் ;
(21) மரமுயர்த்தி இயக்குநர் ;
(22) கதிரைவாள் இயக்குநர் ;
(23) தொழில்பயில்வோர் ;
(24) பலகை சீவுவோர் ;
(25) பலகை வெட்டுவோர் ;
(26) செவ்வை அரிவாளர் ;
(27) தூவி முனை சீவுவோர் ;
(28) அறுவணிப் பணிப்பாளர் ;
(29) பலகையமைப்போர் ;
(30) ஆணிப் பணியாளர் ;
(31) அளவரிவாளர் ;
(32) பொருத்து முனையமைப்போர் ;
(33) முடிச்சமுத்தல் சீவுவோர் ;
(34) பலகை அளப்போர் ;
(35) அளவுமாதிரி வெட்டுவோர் ;
(36) விளிம்பு வெட்டுவோர் ;
(37) மரப்பெட்டி செய்வோர் ;
(38) தச்சர் ;
(39) மரத்துளையீட்டாளர் ;
(40) மட்டப்பணியாளர் ;

(41) சட்டகம் வெட்டுவோர் ;
(42) அலங்கார மாதிரி வெட்டுவோர் ;
(43) இணைப்போர் ;
(44) தளபாடம் செய்வோர் ;
(45) கதவு, யன்னற் சட்டம் வெட்டுவோர் ;
(46) விசித்திரப் பொருள் செய்வோர் ;
(47) பேழை செய்வோர் ;
(48) கண்ணடி பொருத்துவோர் ;
(49) மெத்தை செய்வோர் ;
(50) மெருகிடுவோர் ;
(51) மணல் மெருகூட்டுவோர் ;
(52) மட்டமாக்குவோர் ;
(53) துணி வெட்டுவோர் ;
(54) மெத்தைவகை செய்வோர் ;
(55) பிரம்பு பின்னுவோர் ;
(56) திறனில் தொழிலாளர் ;
(57) காவற்காரர் ;
(58) பின்வரும் தொழிலாளர்களைத் தவிர்த்து, மரத்தொழிலிலும் தச்சுத் தொழிலிலும் வேலைக்கமர்த்தப்பட்டிருக்கும் தொழிலாளர் பிறர் :—

(அ) எழுதுவினைஞர், காசாளர், பண்டசாலைப் பொறுப்பாளர், நேரங்குறிப்பவர், பாதுகாப்பாளர்,

(ஆ) 1963 ம் ஆண்டு யூன் மாதம் 29 ந் தேதிய 13,690 ம் இலக்க அதிவிசேட செய்திமடலிற் பிரசுரிக்கப்பட்ட கட்டளையிற் குறிக்கப்பட்ட மோட்டோர்ப் போக்குவரத்துத் தொழிலிலுள்ள தொழிலாளர்,

(இ) 1944 ம் ஆண்டு சனவரி மாதம் 7 ந் தேதிய 9,224 ம் இலக்கச் செய்திமடலிற் பிரசுரிக்கப்பட்டுப் பின்னதாகத் திருத்தப்பட்ட கட்டளையிற் குறிக்கப்பட்ட பொறியியற்றொழிலிலுள்ள தொழிலாளர்கள்.

6–143—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

### 1971 ம் ஆண்டின் 1 ம் இலக்க அவசரகால (நெற்காணிகள்) ஒழுங்குவிதிகள்

1971 ம் ஆண்டின் 1 ம் இலக்க அவசரகால (நெற்காணிகள்) ஒழுங்குவிதிகளின் 3 ம் ஒழுங்குவிதியினால் எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் பிரதி கமத்தொழில் சேவை ஆணையாளர், கருணதாச வீரவாதன ஆகிய நான், புதிய குழுக்கள் ஆக்கப்படும் வரை கீழ் சொல்லப்பட்ட பயிர்ச்செய்கைக் குழுக்களின் அதிகாரங்கள், கடமைகள், பணிகள் எல்லாவற்றையும் பிரயோகிக்கவும், புரியவும், செய்யவும் பின் வருபவர்களுக்கு இத்தால் அதிகாரம் வழங்குகின்றேன்.

| பயிர்ச்செய்கைக் குழுவின் பெயர் | மாவட்டம் | உத்தியோகத்தரின் பெயர் | பதவி | அதிகாரம் பெறும் தேதி |
|---|---|---|---|---|
| ஊணலே .. | குருநாகல் .. | திகிரிபண்டா ககவத்தை .. | கமத்தொழிற் சேவை பெரும்பாக உத்தியோகத்தர் | 15.10.1972 |

கமத்தொழிற் சேவை இலாகா,
இல. 42, சேர் மார்க்கஸ் பர்னந்து மாவத்த,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு மே மீ 14 ந உ.

க. வீரவாதன,
பிரதி கமத்தொழிற் சேவை ஆணையாளர்.

6–73—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

### 1958 ம் ஆண்டின் 29 ம் இலக்க விலங்குகள் சட்டம்

அம்பாறை மாவட்ட அக்கரைப் பற்றுக் காரியாதிகாரியின் பிரிவில் மாடு குறி சுடுவதற்குரிய திகதியும் இடமும்—1973.

| கி. சே. இல. | கி. சே. பிரிவு | குறித்த திகதி | குறித்த இடம் |
|---|---|---|---|
| 10 | திருக்கோவில் | 1973, ஆனி தொடக்கம் புரட்டாதி வரை ஒவ்வொரு மாதத்திலும் வருகிற 1 ம் 2 ம் புதன்கிழமை | கி. சே. கந்தோர் |
| 11 | 2 ம் குறிச்சி, தம்பிலுவில் | டிை | டிை |
| 12 | 1 ம் குறிச்சி தம்பிலுவில் | டிை | டிை |
| 13 | பனங்காடு | டிை | டிை |
| 15 | 1 ம் குறிச்சி, அக்கரைப்பற்று | டிை | டிை |
| 16/17 | $\frac{2}{3}$ ம் குறிச்சி, அக்கரைப்பற்று | டிை | டிை |
| 18/19 | $\frac{4}{5}$ ம் குறிச்சி, அக்கரைப்பற்று | டிை | டிை |
| 20 | 6 ம் குறிச்சி, அக்கரைப்பற்று | டிை | டிை |
| 21 | 7 ம் குறிச்சி, அக்கரைப்பற்று | டிை | டிை |
| 22 | $\frac{8}{9}$ ம் குறிச்சி, அக்கரைப்பற்று | டிை | அரசாங்க மிருக வைத்தியர் கந்தோர் |
| 30 | $\frac{3}{4}$ ம் குறிச்சி, அட்டாளைச்சேனை | டிை | கி. சே. கந்தோர் |
| 31 | 2 ம் குறிச்சி, அட்டாளைச்சேனை | டிை | டிை |
| 33 | 1 ம் குறிச்சி, அட்டாளைச்சேனை | டிை | டிை |
| 34 | பாலமுனை | டிை | டிை |
| 35 | ஒலுவில் | டிை | டிை |
| 35எ | திகவாபி | டிை | கி. மு. சங்கக் காரியாலயம், திகவாவி |

கச்சேரி,
அம்பாறை,
1973 ம் ஆண்டு மே மீ 15 ந உ.

டி. விஜயசிங்க,
அரசாங்க அதிபர்,
அம்பாறை மாவட்டம்.

6–70—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

### கம்பனிகள் கட்டளைச்சட்டம் (145 ம் அத்தியாயம்)

277 (3) ம் பிரிவின் கீழ் பெயர் நீக்கத்திற்கான அறிவித்தல் த சிரிபதி வெலந்த கொம்பனி லிமிரட் கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின் கீழ் 1957.2.20 ம் திகதி இல கூட்டப் பெற்ற த சிரிபதி வெலந்த கொம்பனி லிமிரட் என்னும் கம்பனி வியாபாரம் செய்யவில்லை எனவும், செயற்படவில்லை எனவும் நம்புவதற்கு நியாய மான காரணம் இருத்தலால் இதற்கு மாறுபாடான காரணம் காட்டாத விடத்து, கம்பனிகள் பதிவாளராகிய ருவான்புர லிக்மன் டி சில்வா ஆகிய நான், கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின (145 ம் அத்தியாயம்) 277 (3) ம் பிரிவின்படி செயலேற்று, இத்திகதியில் இருந்து 3 மாத இறுதியில் த சிரிபதி வெலர்ந்த கொம்பனி லிமிரட் இன் பெயர் இத் திணைக்களத்தில் இருககும் கம்பனிகளின் பதிவேட்டில் இருந்து நீக்கப் பெற்று, குறித்த கம்பனி குலைக்கப்படுமென இத்தால் அறிவித்தல் தருகிறேன்.

ரு. லி. த சில்வா,
கம்பனிகள் பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1973. ஆண்டு மே மாதம் 07 ம் திகதி.

6-120-- 01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

எனது இலக்கம் எல்.ஈ.ஜே./எல்/152

### தேசிய வீடமைப்புத் திணைக்களம்

ஈடு வைக்கப்பட்ட காணி, தேசிய வீடமைப்புச் சட்டத்தின் (இலங்கைச் சட்டத்தொகுப்பு 401 ம் அத்தியாயம்) 76 ம் இலக்கப் பிரிவின் கீழ் 1966 ம் ஆண்டு 36 ம் இலகக (திருத்தியமைக்கப்பட்ட) மசோதாவின் பிரகாரம் விற்பனை செயவதற்கு அதிகாரம் வழங்கல.

தேசிய வீடமைப்பு சட்டத்தின் 9 (1) பீ இலக்கங் கொண்ட உட்பிரிவின் பிரகாரமும், அதற்கு இணைந்த திருத்த மசோதாக்களின் பிரகாரமும் நியமிக்கப்பட்ட தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளராகிய சின்னத்தம்பி செல்லையா ஆகிய நான் இலங்கைக் குடியரசின் சார்பாக சித்தங்கேணி யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு முருகேசு கந்தையா சுப்பிரமணியம் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட 1968.8.5 ந் திகதிய 7785 இலக்கங் கொண்ட ஈட்டின் பிரகாரம் பணம் செலுத்துவதை மீறியுள்ளமையால் "விசியா இல்லாம்" எனவாகிய என்ற இடத்தில் வசிக்கும் அந்தோனிப்பிள்ளை சந்தியாபிள்ளையும் அவரின் மனைவி மேறி திறேசா சந்தியாபிள்ளை ஆகியவர்களிடமிருந்து 1973.5.5 ம் திகதிவரை அறவிட வேண்டிய பத்தொன்பதாயிரத்து நாற்பது ரூபா ஐம்பது சதம் (ரூ. 19,040/50) 1973.4.10 ந் திகதிக்குப்பின் பணத்தைத் தவிர அறவிடுவதற்கும், 1973.5.5 ந் திகதி முதல் விற்பனை நடைபெறவுள்ள திகதி அல்லது முழுவதையும் செலுத்தும் திகதி வரையும் மேலும் பதின்மூவாயிரத்து நூற்றி மூன்று ரூபா இருபத்தி இரண்டு சதம். (13,103/22) பணம் தொடர்பாகவுள்ள வட்டிப்பணம் வருடத்திற்கு 7 வீதத்தில் மேற்குறித்த ஈட்டின் பிரகாரம் 1973.5.5 ந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதி வரை சேர்மதியாகும் சகல குற்றப் பணத்துடன் அறவிடவும், அப்படி அறவிடும் பட்சத்தில் ஏற்படும் செலவுகளையும், கட்டணங்களையும் அறவிடவும் இதற்கு இணைக்கப்பட்டுள்ள உப அட்டவணையில் குறிக்கப்பட்டுள்ள காணியையும், அதற்குட்பட்ட சகலவற்றையும் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்வதற்காக ஆணை பிறப்பித்து, அப்படி விற்பனை செய்வதற்காக இல. 24, முதலாம் குறுக் குத்தெரு, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் வதியும் கே. சுப்பிரமணியம் ஆகிய பிரசித்த ஏலக்காரருக்கு அங்கீகாரம் வழங்குகிறேன்.

எஸ். செல்லையா,
தேசிய வீடமைப்பு உதவி ஆணையாளர்.

தேசிய வீடமைப்புத் திணைக்களம்.,
பழைய கச்சேரிக் கட்டடம்,
யாழ்ப்பாணம்,
1973 ம் ஆண்டு மே மீ 14 ந உ.

#### ஆதனடாப்பு

வட மாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், வலிகாமம் மேற்கு பண்டத் தரிப்பு கோவில்பற்று, சிறுவிளான் இறை அத்துவம்புலம் நிலப்பரப்பு 4 வரகு பயிர் உத்தரவு பெற்ற உலாந்தா ஏ. லாசரஸ் அவர்களால் 5.10.66 ல் வரையப்பட்ட நில அளவுப்படம் இல. 3305 ன் படி நிலப்பரப்பு 3 குளி 16 வரகு பயிர்செய்கை எல்லைகள் கிழக்கு சந்தியாபிள்ளையின் கைம்பெண் ஞானம்மாவின் ஆதனம், வடக்கு ஒழுங்கை, மேற்கு அந்தோனிப்பிள்ளை செபஸ்தியாம்பிள்ளையினதும் அவரது மகனதும் ஆதனங்கள், தெற்கு செபஸ்தியான்பிள்ளை பெண் அயிலாவினதும், பீ. ஏ. சமரக்கோன் பெண் அன்னு மேரியினதும் ஆதனங்கள். கட்டப்பட வேண்டிய வீடும் பதிவு செய்யப்பட்டது. இல. பாகம் ஈ 308, பக்கம் 186.

6-35—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

### கம்பனிகள் கட்டளைச் சட்டம் (145 ம் அத்தியாயம்)

277 (5) ம் பிரிவின்கீழ் பெயர் நீக்கத்துக்கான அறிவித்தல் டிம்புல்ல டிரான்ஸ்போர்டர்ஸ் லிமிரட் கம்பனிகள் கட்டளைச்சட்டத்தின் (145 ம் அத்தியாயம்) ஏற்பாடுகளின்கீழ் 1955.10.3 ம் திகதி இல் உருவாக்கப் பெற்ற டிம்புல்ல டிரான்ஸ்போர்டர்ஸ் லிமிரட் என்னும் கம்பனி வியா பாரம் செய்யவில்லையெனவும் செயற்படவில்லையெனவும் நம்புவதற்கு போதிய காரணம் இருப்பதாலும்,

1972.12.08 ம் திகதியையுடைய 47 ம் இலக்க இலங்கை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட 1972.11.08 ம் திகதியையுடைய அறி வித்தலின் பிரகாரம் டிம்புல்ல டிரான்ஸ்போர்டர்ஸ் லிமிரட், அதற்கு மாறுபாடாகக் காரணம் காட்டப்பட்டாலன்றி அந்தத் திகதியிலிருந்து மூன்று மாதங்கள் முடிவுறும்போது பதிவேட்டிலிருந்து பெயர் நீக்கப் படுமென அறிவிக்கப்பட்டிருப்பதாலும்,

டிம்புல்ல டிரான்ஸ்போடர்ஸ் லிமிரட் மூன்று மாதகால எல்லைக்குள் மாறுபாடாகக் காரணம் எதையும் காட்டாதமையாலும்,

கம்பனிகள் பதிவாளராகிய வைரமுத்து சிதம்பரப்பிள்ளை நடராஜா ஆகிய நான், (145 ம் அத்தியாயம்) 277 (5) ம் பிரிவின்கீழ் செயலேற்று இந்த அறிவித்தலின் மூலம் டிம்புல்ல டிரான்ஸ்போடர்ஸ் லிமிரட் என்னும் கம்பனி, இன்றைய தினம் கம்பனிகள் பதிவேட்டிலிருந்து பெயர்நீக்கம் செய்யப்பட்டு குலைக்கப்பட்டதென பிரகடனம் செய்கிறேன்.

வ. சி. நடராஜன்,
பதில் கம்பனிகள் பதிவாளர்.

கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஏப்பிரல் மீ 26 ந உ.

6-77—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

---

### 1952 ம் ஆண்டின் திஸ்ஸமஹராம யாத்திரீகர் சட்டம்

1952 ம் ஆண்டின் திஸ்ஸமஹாராம யாத்திரீகர் சட்டத்தின் 3 ம் பிரிவின் பிரகாரம், ஹம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபர், தொன்ஹெறி ஜஸ்டின் அபேகுணசேகர ஆகிய நான் கீழே கொடுக்கப் பட்டுள்ள காலங்கள் 1952 ம் ஆண்டின் திஸ்ஸமஹராம யாத்திரிகர் சட்டம் அமுலில் இருக்கும் காலங்கள் என இதனுல் பிரகடனப்படுத்து கிறேன்.

1973 பொசொன் உத்சவம்—திஸ்ஸமஹராம

1973 ம் ஆண்டு ஜூன் மாதம் 10 ம் திகதி தொடக்கம் 1973 ம் ஆண்டு ஜூன் மாதம் 16 ம் திகதி வரை.

(இரு நாட்களும் சேர்த்து)

1973 எசல உற்சவம்—திஸ்ஸமஹராம

1973 ம் ஆண்டு ஜூலை மாதம் 1 ம் திகதி தொடக்கம் 1973 ம் ஆண்டு ஜூலை மாதம் 16 ம் திகதி வரை.

(இரு நாட்களும் சேர்த்து)

டீ. எச். ஜே. அபேகுணசேகர,
ஹம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபர்.

கச்சேரி,
ஹம்பாந்தோட்டை,
1973 ம் ஆண்டு மே மீ 14 ந உ.

6-90—01.06.73 ந் திகதிய வர்த்தமானி இல. 62

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

**1.12.1968 தொடக்கம் அமுலுக்கு வந்தது**

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர் அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், கால தாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புரேக்ரருல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 1 ந் திகதியிலிருந்து பினவருமாறு :—

| | | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைவ | .. | .. | .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | | .. | .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ¼ பக்கம் | .. | .. | .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | | .. | .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 1 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கடகு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 1.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | | | | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் | — | — | .. | 46 | 0 | .. | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு | .. | .. | .. | 36 | 0 | .. | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் | | .. | .. | 43 | 50 | .. | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான கலாவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | | விலை | | | தபாற் செலவு (உள்ளூர்) |
|---|---|---|---|---|---|
| | | ரூ. | ச. | | சதம் |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் | .. | 0 | 50 | .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. | .. | 1 | 0 | .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | | 0 | 30 | | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் | .. | 0 | 60 | .. | 15 |

இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான **பணங்கள்** யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் **ஏற்றுக்** கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| யூன் .. | 1.6.73 | வெள்ளி .. | 25.5.73 | வெள்ளி .. | ந. ப. 12.00 |
| | 8.6.73 | வெள்ளி .. | 1.6.73 | வெள்ளி .. | ந. ப. 12.00 |
| | 14.6.73 | வியாழன் .. | 8.6.73 | வெள்ளி .. | ந. ப. 12.00 |
| | 22.6.73 | வெள்ளி .. | 14.6.73 | வியாழன் .. | ந. ப. 12.00 |
| | 29.6.73 | வெள்ளி .. | 22.6.73 | வெள்ளி .. | ந. ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.